விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 13 வெள்ளிக்கிழமை (29.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 222

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் நேற்று யாழ்.நகரில் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப் பகுதியில் நேற்று நண்பகல் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் தினமுரசுப் பத்திரிகை விற்பனை செய்துகொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளார்.


தலையிலும், முதுகிலும் சுடப்பட்ட அவர் ஸ்தலத்திலேயே மரணமானார். கொல்லப்பட்டவர் ஈ.பி.டி.பி உறுப்பினரான சூரியப்பிள்ளை நிக்ஸன் (வயது 23) எனத் தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா விசாரணைகளை மேற்கொண்டதுடன்,

பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு யாழ்.பொலி ஸாருக்கு உத்தர விட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவுக்கான பிரகடனம் கிளிநொச்சியில் நேற்று கையளிப்பு



(கிளிநொச்சி)

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழீழத் தேசிய எழுச்சி மாநாட்டின் போது எடுக்கப்பட்ட பிரகடனம் நேற்று விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரனுக்கு கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. பிரகடனத்தை திருமலை மக்கள் பேரவைத்தலைவர் விக்னேஸ்வரன், துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடம் அரசியல்துறை நடுவப்பணியகத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய இராணுவ பயிற்சி நிலையங்களில் இலங்கை இராணுவத்திற்கு தீவிர பயிற்சி

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி

(புதுடில்லி)

**இலங்கை இராணுவத்துக்கு இந்திய இராணுவப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்பட்டு வருவதாக இந்திய அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. வெள்ளம், ஆழிப்பேரலை போன்ற இயற்கை சீற்றங்களின்போது நிவாரண உதவி, உயர் இராணுவ அதிகாரிகளின் சுற்றுப்பயணம், கடற்படைக் கப்பல்களின் பயணம், கடல் கூட்டுக் கண்காணிப்பு ஆகிய ஒத்துழைப்பு நடவடிக்கைகளுக்கும் இந்தியா இணங்கியுள்ளது.**

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் நீதிமன்றம் அறிவிக்கும்?

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டிய காலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் கருத்தை அறிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்பின் 129(1) பிரிவுக்கமைய உயர் நீதிமன்றத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## 20 பேரின் மரணதண்டனையை நிறைவேற்ற சட்டமா அதிபர் திணைக்களம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் 20 பேருக்கான தூக்கு தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். ஐந்து வழக்குகளில் தூக்கு

பிரதம நீதியரசரின் அனுமதியுடன் நீதியமைச்சின் ஊடாக ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்திருப்பதாக அந்த அதிகாரிகள் கூறினர்.

ஹோகந்தர கொலைச் சம்பவம், சதீப லக்ஷான் சிறுவன் கொலை, ரீட்டா ஜோன்

## ஊடகவியலாளரின் போக்குக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் சிலர் கொழும்பு பிரேபுறுக் பிரதேசத்தில் அமைந்துள்ள மகாராஜா கூட்டு நிறுவனத்தின் ஊடகத் தலைமைக் காரியாலயத்திற்கு

இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கொழும்பு கைபாக் மைதானத்தில் இருந்து வந்த இவர்கள் மகாராஜா கூட்டு நிறுவனத்தின் ஊடக தலைமைக் காரியாலயத்திற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(கொழும்பு)

இலங்கையில் 20 பேருக்கான தூக்கு தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். ஐந்து வழக்குகளில் தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்ட சுமார் 20 பேருக்கான தண்டனை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இவர்களின் தண்டனையை நிறைவேற்ற பிரதம நீதியரசரின் அனுமதியுடன் நீதிய மைச்சின் ஊடாக ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்திருப்பதாக அந்த அதிகாரிகள் கூறினர்.

ஹோகந்தர கொலைச் சம்பவம், சதீப லக்ஷான் சிறுவன் கொலை, ரீட்டா ஜோன் கொலை, இனோகா செவ்வந்தி கொலை, கிருஷாந்தி குமாரசுவாமி கொலை ஆகிய ஐந்து வழக்குகளில் இவர்களுக்குத் தண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் சிலர் கொழும்பு பிறேபுறுக் பிரதேசத்தில் அமைந்துள்ள மகாராஜா கூட்டு நிறுவனத்தின் ஊடகத் தலைமைக் காரியாலயத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேர்வின் சில்வா ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தமையைக் கண்டித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கொழும்பு கைபாக் மைதானத்தில் இருந்து வந்த இவர்கள் மகாராஜா கூட்டு நிறுவனத்தின் ஊடக தலைமைக் காரியாலயத்திற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதியமைச்சர் மேர்வின் சில்வா, நியாயமாகவும், நேர்மையாகவும் அர்ப்பணிப்புடன செயற்பட்டு வருபவரென ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர். (ச)

## ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடமாம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் நிமல் சிறிபால டி சில்வா இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறுமென்றும், 2005 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறாது என்றும் நிமல் சிறிபால டி சில்வா கூறினார்.

சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்றபோது மகிந்த ராஜபக்ஷவை 62 உறுப்பினர்கள் ஆதரித்தனர். (48)

# போரை ஆரம்பிக்கக்கோரி பூநகரி மக்கள் ஆர்ப்பாட்டம்

## தலைவர் பிரபாவுக்கு மகஜர் அனுப்பிவைப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைக்கான போரை மீண்டும் ஆரம்பிக்குமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு வலியுறுத்தி கிளிநொச்சி, பூநகரி பிரதேச மக்களால் பேரணி ஒன்று நேற்று நடாத்தப்பட்டது.

பூநகரி மகாவித்தியாலய முன்றலிலும், பூநகரி பிரதேச செயலக முன்றலிலிருந்தும் இருபகுதிகளாக ஆரம்பமான பேரணி பூநகரி வாடியாடி மத்திய பகுதியைச் சென்றடைந்தது. அங்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் பொன்.தியாகநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பலர் உரையாற்றினர். இறுதியில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கும், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவுக்குமான மனுக்கள் கையளிக்கப்பட்டன.

பேரணியில் கலந்துகொண்ட மக்கள் பொறுமையால் வருவது சிறுமை, பொங்கி எழுந்தால் பிறக்கட்டும் தமிழீழம், சமாதானம் வேண்டாம் போரே வேண்டும்.

சந்திரிகாவின் சமாதானம் செப்படி வித்தை. எங்கள் இதயம் எமக்குவேண்டும் என்ற கோஷங்களை எழுப்பினர்.

கடற்புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணி, மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

# அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை

## நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ்.மாவட்ட அபி.நலவுரிமைச் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

(பருத்தித்துறை)

இலங்கையில் தமிழும், சிங்களமும் அரச கருமமொழியாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகளிலும் தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றது.

இதனால் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அல்லல்படுகின்றனர். இதனை நீக்கி தமிழ் மக்களுக்கு விமோசனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கேட்டுள்ளது. இது சம்பந்தமாக அச் சங்கத் தலைவர் எஸ்.பத்மநாதனால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளதாவது,

அரசாங்கத் திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுடைய பெயர்ப்பலகைகள், காரியாலய பெயர்ப்பலகைகளில் கூட ஆங்கிலமோ தமிழிலோ இருப்பதில்லை. மேல் மாகாணசபைப் பதிவாளர் அலுவலகத்தில் தமிழில் கருமமாற்றுவது மிகக் கஷ்டமாகவே உள்ளது.

கொழும்பு மாளிகாவத்தை ஓய்வூதியத் திணைக்களத்தில் தமிழ் மக்கள் கருமமாற்றுவது மிகக் கடினமாகவே உள்ளது. இங்கு ஒரே ஒரு தமிழ்மொழி பெயர்ப்பாளரே (2ஆம் மாடியில்) பணியாற்றுகின்றார்.

வடக்கு-கிழக்கில் இருந்தும் மலையகத்தில் இருந்தும் ஓய்வூதிய நடவடிக்கைகளுக்காகப் பலர் இவ் அலுவலகத்திற்கு வந்து வெறும் கையுடனேயே ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர். இதனால் தமிழ் மக்கள் சொல்லொணா கஷ்டங்களையும் இன்னல்களையும் அனுபவித்து வருகின்றனர். பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சினதும் தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சினதும் நிர்வாகச் சீர்கேடுகளே இவற்றிற்குக் காரணமாகும்.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் தமிழ் தெரிநத உத்தியோகத்தர்களும் தமிழ் தட்டச்சு இயந்திரங்களும் பத்து வீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகினறன. ஓயவூதிய நடவடிக்கைகளுக்காக வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்தும் மலையகத்தில் இருந்தும் கொழும்புக்கே வரவேண்டியுள்ளது. அங்கு பதிவு அறையில் உள்ள விபரக் கொத்துக்களைக் கூட அங்கு சேவையில் உள்ளீவர்கள தேடி எடுக்க முடியாமல் 'இல்லை' எனறே இலகுவாகக கூறிவிடுகின்றனர். ஆனால் அவை அங்கேயே உள்ளன.

தெல்லிப் பழைப் பிரதேச செயலகத்தில் இருந்து தனது கணவரின் ஓய்வூதிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கொழும்பிற்கு வந்த பெண்மணி ஒருவர் பலத்த கஷ்டங்களை அனுபவித்தார். பின்னர் நான் கணக்காளர் ஸ்ரீவர்த்தனவிடம் முறையிட்டதன் காரணமாகவே அப் பெண்மணியின் வேலைகள் முடிவுற்றன.

இக் குறைபாடுகள் பற்றிப் பல முறை புகார்செய்தும் எந்த விதமான பலனும் கிடைக்கவில்லை. ஓய்வூதியக் காரியாலயம் சீர்கெட்டுள்ளது. இதில் விசேட கவனம் எடுத்து இக்காரியாலயத்தைச் சீர்செய்ய வேண்டும்.

அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களுக்குத் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்கள் 25 சதவீதமாவது நியமிக்கப்பட வேண்டும்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திலும் தமிழ் மக்கள் கருமங்களையாற்ற முடியாது தவிக்கின்றனர். அங்கு ஏஜெண்டுகளின் தொல்லைகளும் காடையர்களின் அட்டகாசங்களும் தலைவிரித்தாடுகின்றன. பம்பலபிட்டியில் உள்ள இவ் அலுவலகத்திற்குச் செல்லும் வீதியின் இருமருங்கிலும் உள்ள கடைகளில் சமாதான நீதவான்களின் 'றபர் ஸ்ட்டாம்புகள்' வைக்கப்பட்டுப் பதிவுசெய்து கொடுக்கப்படுகின்றன. சமாதான நீதவான்களின் கையொப்பத்திற்கு 300 ரூபா வழங்கப்படுகிறது.

தமிழ் மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய இவ்வாறு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி அவலங்களை அனுபவிக்க வேண்டிய நிலையே தொடர்கின்றது.

எனவே, தாங்கள் இக் குறைபாடுகள் பற்றிக் கவனத்தில் எடுத்து இதற்கு உரிய நடவடிக்கை எடுத்து தமிழ்மொழியை அமுலாக்கிப் பாதிக்கப்பட்டு வரும் தமிழ்மக்களுக்கு விமோசனம் வழங்க வேண்டும் எனவும் அம் மகஜரில் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-52)

# இராசி பலன்

**29.07.2005**
**(ஆடி 13, வெள்ளிக்கிழமை)**
**நவமி பின்னிரவு 2.02 மணிவரை**
**பரணி முன்னிரவு 6.53 மணிவரை**
**இராகுகாலம் 10.33 - 12.03 மணிவரை**
**சுபநேரம் 6.03 -7.33 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தெய்வ தரிசனம், கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, பெரியோர் சந்திப்பு. |
| இடபம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படுதல், சுப செலவு, காரியதாமதம். |
| மிதுனம் | தெய்வதரிசனம், காரிய அனுகூலம், புதிய தகவல், பொருள் சேர்க்கை. |
| கடகம் | சுபநிகழ்வு, நல்ல முயற்சி, போசன நன்மை, பிரயாண நன்மை. |
| சிங்கம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, அச்சமான நிலை, உடல் நலக்குறைவு. |
| கன்னி | அபகீர்த்தி, காரிய தடங்கல், அச்சமான நிலை, போசன சுகம். |
| துலாம் | அபூர்வ சந்திப்பு, நல்ல வரவேற்பு, முயற்சி பலிதம், தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | பணவருவாய், சத்துருஜெயம், ஆரோக்கியம், காரிய அனுகூலம். |
| தனுசு | கௌரவக் குறைவு, மனக்கவலை, எடுத்த கருமங்கள் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | பயந்த சுபாவம், தொழிலில் ஆர்வம், புதிய திருப்பம், தெய்வ சிந்தை. |
| கும்பம் | இனிய அனுபவம், வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை, சுபகாரியம். |
| மீனம் | பொருள் விரயம், அமைதிக் குறைவு, தெய்வ தரிசனம், வேலைச்சுமை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

## கடத்தப்பட்டவர்களை விடுவிக்க

# உணவுப்பொருட்களுடன் கப்பல் போராளிகளின் புதிய கோரிக்கை

(சோமாலியா)

'சோமாலியாவில் தங்களால் கடத்தப்பட்ட உணவுக் கப்பலில் உள்ள இலங்கை மாலுமிகளையும் ஏனையவர்களையும் விடுவிக்க உணவுப் பொருட்களுடன் கப்பலையும் தமக்குத் தரவேண்டும் எனறு கப்பல் உரிமையாளர்களுக்கும் போராளிகள் அறிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் கப்பம் கோரிய இந்தக் குழுவினர் தற்போது உணவுப் பொருட்களுடன் கப்பலைக் கோரியிருப்பதாகக் குறிப்பிட்ட கப்பல் நிறுவனத்தை மேற்கோள்காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

எம்டி ஷம்லோ என்ற பெயரிலான இந்தக் கப்பல் ஒரு மாதத்திற்கு முன்பதாக சோமாலியாவில் மொகடிஸீவ நகரை அண்மித்த கடற்பகுதியில் வைத்துப் பேராளிகளினால் கடத்தப்பட்டுள்ளது.

சுனாமிப் பேரலையின் போது சோமாலியாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு 850 மெற்றிக்தொன் உணவு வகைகளை உலக உணவுத்திட்டம் கப்பல் மூலமாக அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கப்பல் மாலுமியும் ஏனையவர்களும் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பது குறித்துப் போராளிகள் அறிவிக்காத போதிலும் அவர்கள் தேகாரோக்கியத்துடன் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என்று கப்பல் நிறுவனம் கூறியுள்ளது. (அ-2)

# அலயன்ஸ் டிரஷ்ட் உதவி


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கு அலயன்ஸ் டிரஷ்ட் நிறுவனம் 250 வள்ளங்களையும் அவற்றிற்கான இயந்திரங்கள், வலைகளையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட இளவாலை சீந்திப்பந்தல் பிரதேசத்திற்கு 24 வள்ளங்களை நாளை மறுதினம் வழங்கவுள்ளது. (து-19)

# ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள்

இந்தக் கலியுகத்திலே மக்களுக்காக மக்கள் நலம் பெறக கேட்டதைக் கொடுக்கும் காம



'பூஜ்யாய ராகவேந்த்ராய
ஸத்ய தர்ம ரதாயஸ
பஜதாம் கல்ப்ப விருக்ஷ் யாய
நமதாம் காமதேனவே'

தேனுவாக, துன்பங்கள் தீர்க்கும வைத்தியராக கி.பி.1581 இல் புவனகிரியில் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் அவதரித்தார்.

வெங்கடநாதன் என்ற இயற்பெயர் கொண்ட ராகவேந்திர சுவாமிகளின் தாய் தந்தையர் அவரது இளவயதில் இறந்துவிட படிப்பிலும், சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றிருந்த இவரை, இவரது தமயனார் குருராஜன் சுசீந்திர மடத்துக்கு அனுப்பி வைத்தார்.

வெங்கடநாதரின் பக்தி, ஒழுக்கம், கல்வி அறிவு முதலியவறறைக் கண்ணுற்ற சுசீந்திர மடத்தின் தீர்த்தர் இவரை மதுரை, தஞ்சாவூர் அரசவைக்கு அனுப்பி மதப் பிரசாரம் செய்யப் பணித்தார்.

பரிமளம் என்ற நூலுக்கு விளக்கம் எழுதியமையால் இவர் பரிமளாச் சாரியார் எனப் போற்றிப் புகழப்பட்டார். வெங்கடநாதருக்குத் திருமண வயது வந்துவிடவே அவருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற தமது ஆசையை அண்ணன் குருராஜன மடத்து தீர்த்தரிடம் வெளியிட அவரும் மனமுவந்து ஆசீர்வதித்து பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பி வைததார்.

சரஸ்வதிபாய் என்னும் பெண்ணைத் திருமணம் முடித்து இல்லற வாழ்வை மேற்கொண்ட வெங்கட நாதருக்கு சரஸ்வதி கடாட்சம் இருந்ததேயன்றி இலட்சுமி கடாட்சம் இல்லாததால் வறுமை வாட்ட மனைவியின் வேண்டுகோளின் படி திரும்பவும் மடத்தையே சென்றடைந்தார்.

மடத்திலே வாழும் காலத்தில் சுரேந்திர தீர்த்தருக்கு உடல்நிலை குன்ற தனக்குப் பின் மடத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு வெங்கடநாதரிடம் கூறினார். சந்நியாசம மேற்கொள்ள முதலில் தயங்கிய வெங்கடநாதர் அருப உருவில் வந்த தாயாரின் கட்டளைப்படி இல்வாழ்வைத் துறந்து சந்நியாசம் மேற்கொண்டார்.

சாலிவாகன சகாப்தம் 1545 (கி.பி.1623-24) ருத்ரோத்காரி வருடம மாசி மாதம் சுபயோக சுப்முகூர்த்தத்தில் ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தரெனும் நாமத்தோடு சுசீந்திர மடத்தின் தீர்த்தரானார். □

நல்லூர் சிவா

## போதைப்பொருள் கடத்தல்;

# முன்னாள் விமானப்படை கோப்ரலுக்கு ஆயுள்தண்டனை

(கொழும்பு)

இலங்கைக்கு ஹெரோயின் கடத்தி வந்த முன்னாள் விமானப்படை கோப்ரலுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே திட்டமிட்ட வகையில் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வந்த சம்பவம் தொடர்பாக வமான சேவைகள் நிறுவனமொன்றில் பாதுகாப்பு அதிகாரியாகச் சேவையாற்றி வந்த விமானப்படை கோப்ரல் கைது செய்யப்பட்டார். நீர்கொழும்பு ஏத்துகாலையைச் சேர்ந்த அவருக்கு இந்த வழக்கில் நீர்கொழுமபு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு 24 93.5 கிராம் ஹெரோயின் கொண்டு வந்தது. அதைத் தன்னிடம் வைத்திருந்தது ஆகிய குற்றங்களுக்காக அவருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதி பயணப் பொதியினுள் மறைத்து இலங்கைக்கு 6 கிலோ 200 கிராம் போதைப பொருளைக் கொண்டு வந்த போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தப் போதைப்பொருட்களினுள் 2493.5 கிராம் சுத்தமான ஹெரோயின் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (து-4)

## வெளிநாடுகளில் வசிக்கும் ஓய்வூதியர்கள்

# ஓய்வூதியம் பெறுவதற்கு இலங்கைத் தூதரக அத்தாட்சிக் கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வசிக்கும் ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் தமது ஓய்வூதியத்தைப் பெறுவதற்குத் தாங்கள் வசிக்கும் நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் அத்தாட்சி செய்யப்பட்ட கடிதம் பெறவேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்த ஓய்வூதியத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் ஓய்வூதியக்காரர்களின் பல இலட்சம் ரூபா மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் கே.ஏ.திலகரத்ன தெரிவித்துள்ளார்.

தூதரக உறுதிக் கடிதம் சமர்ப்பிக்காத வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியத்தை வழங்க வேண்டாம் என்று வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த பணிப்பாளர் திலகரத்ன, வெளிநாடுகளில் வசிக்கும் சுமார் 20 ஆயிரம் இலங்கையர்கள் ஓய்வூதியம் பெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# யாழில் 58அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி நிதியொதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2005ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தினூடாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 58 அபிவிருத்தித் திட்டங்களுக்கு தனது நிதியினை ஒதுக்கியுள்ளார்.

அத்திட்டங்கள் வருமாறு,

சூசையப்பர் கடற்றொழிலாளர் சங்கம், மாதகல். இருபாலை கிழக்கு இந்து மயானம், இருபாலை கிழக்கு. பைந்தமிழ் சனசமூக நிலையம், வட்டுக்கோட்டை, அராலி மேற்கு. மகா விஷ்ணு சனசமூக நிலையம், நாவற்குழி தெற்கு, கைதடி. ஆரியகுளம் முற்போக்கு சனசமூக நிலையம், யாழ்ப்பாணம். ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம், கல்வியங்காடு, கோப்பாய். சரஸ்வதி சனசமூக நிலையம், ஊரெழு மேற்கு.

பாரதி சனசமூக நிலையம், மந்திரிமலை, அச்சுவேலி. ஞானவைரவர் சனசமூக நிலையம், பத்தமேனி, அச்சுவேலி. குருநகர் சனசமூக நிலையம், புத்தூர் கிழக்கு. சிவசக்தி சனசமூக நிலையம், நீர்வேலி வடக்கு. கலைமகள் சனசமூக நிலையம், தோப்பு, அச்சுவேலி. முரசொலி சனசமூக நிலையம், கதிரிப்பாய், அச்சுவேலி. ஜனசக்தி சனசமூக நிலையம், சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

அண்ணா சனசமூக நிலையம், யோகபுரம், உரும்பிராய். கலை ஒளி சனசமூக நிலையம், சிறுப்பிட்டி தெற்கு. சரஸ்வதி சனசமூக நிலையம், சொக்கதிடல், புத்தூர் கிழக்கு. கலைவாணி சனசமூக நிலையம், சிறுப்பிட்டி வடக்கு, சிறுப்பிட்டி. மத்திய சனசமூக நிலையம், அச்செழு, நீர்வேலி. தனிபனை சனசமூக நிலையம், அச்செழு, நீர்வேலி. விக்கினேஸ்வரா சனசமூக நிலையம், வாதரவத்தை, புத்தூர். கணேஸ்வரா சனசமூக நிலையம், பெரிய பொக்கனை, வதரவத்தை.

கல்சன் சனசமூக நிலையம், மாலை வைரவர் கோவிலடி, கரந்தன். ஸ்டார் சனசமூக நிலையம் கோப்பாய் மத்தி, கோப்பாய். கணோச சனசமூக நிலையம் நீர்வேலி, தெற்கு. கண்ணகி அம்மன் சனசமூக நிலையம், கோப்பாய் வடக்கு. மகாத்மாஜீ சனசமூக நிலையம் புத்தூர் கிழக்கு. உதய சூரியன் சனசமூக நிலையம், செல்வபுரம் உரும்பிராய். முத்தமிழ் சனசமூக நிலையம், ஊரெழு மேற்கு. பாரதி சனசமூக நிலையம், நாவற்குழி.

ஜனசக்தி சனசமூக நிலையம்,அரசடி வீதி, நல்லூர். கலைச்சுடர் சனசமூக நிலையம், பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. பராசக்தி சனசமூக நிலையம், மாவடி வல்வெட்டித்துறை. புனித அந்தோனியர் சனசமூக நிலையம், பெரியவிளான். விக்னேஸ்வரா சனசமூக நிலையம், குப்பிளான். மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், கோண்டாவில் வடக்கு. கற்பகவிநாய்கர் மகளிர் சிக்கன கூட்டுறவுச் சங்கம், உரும்பிராய்.

மகளிர் அமைப்பு, புத்தூர் மேற்கு. செல்லத்துரை வீதி, ஆனந்தபுரம் கட்டப்பிராய். அச்சுவேலியில் புதிதாக பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கு. சோமஸ்கந்தா வித்தியாலயம், புத்தூர். யா/அமெரிக்கன் மிசன் வித்தியாலயம், அராலி வடக்கு. யா/கைதடி கலைவாணி வித்தியாலயம், கைதடி. யா/செங்குந்தா இந்துக் கல்லூரி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், அச்செழு, நீர்வேலி. யா/பூதக்கலட்டி விஷ்ணு வித்தியாலயம், புத்தூர். யா/இருபாலை றோ.க.த.க.பாடசாலை, இருபாலை, கோப்பாய். யா/சிறீ பஞ்ஞாசீக வித்தியாலயம், புத்தூர் கிழக்கு.

யா/புனித திரேசா மகளிர் கல்லூரி அச்சுவேலி. சிறீமுருகன் வித்தியாலயம், மைலங்காடு. அச்சுவேலி வைத்தியசாலை, அச்சுவேலி. கணேசா பாலர் பாடசாலை, உரும்பிராய் வடக்கு. சிறுவர் பராமரிப்பு நிலையம், நீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றம், திருநெல்வேலி. நண்பர்கள் விளையாட்டுக்கழகம், அல்வாய் வடக்கு, அல்வாய். விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம், அச்சுவேலி தெற்கு. சித்தி விநாயகர் சனசமூக நிலையம், அச்செழு, நீர்வேலி. ஒளி நிலா விளையாட்டுக் கழகம், வேபிபுரம் அச்செழு.

ஆகிய திட்டங்களுக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி நிதியொதுக்கியுள்ளார்.

இது தவிர கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் மகாவித்தியாலயத் திருத்தத்திற்கும், உரத்திரபுரம் சிவன் கோயில், உருத்திரபுரம் 10ஆம் வாய்க்கால் வீதி, வட்டக்கச்சி கட்சன் வீதி, பளை பாடசாலை பான்ட் வாத்தியம் போன்றவற்றிற்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி நிதியொதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## 31ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 31ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் ஆகஸ்ட் 4ஆம் திகதி நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

25 மைல் சைக்கிளோட்டப் போட்டி, 10 மைல் மரதன் ஓட்டப்போட்டி, கிறீஸ் கம்பம் ஏறும் போட்டி, கயிறு இழுத்தல், வலைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய போட்டிகள் இதில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றியீட்டும் விரர்களுக்கான பரிசில்கள் விழாவில் வைத்து பிரதம விருந்தினரால் வழங்கப்படவுள்ளன. (ற-52)

## படகு அன்பளிப்பு

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறைப் பிரிவுக்கு படகு ஒன்றினை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இப்படகின் மூலம் கரையோரப் பகுதி மக்களுக்கு சிறந்த முறையில் முதலுதவிச்சேவை வழங்கவுள்ளதாகவும் எதிர்வரும் செல்வச்சந்நிதி ஆலய உற்வசத்தின் போதும், வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தத் திருவிழாவின் போதும் முதலுதவிச் சேவைகளுக்கு இப்படகு பயன்படுத்தப்பட உள்ளதாகவும் மேற்படி சங்கத்தின் பருத்தித்துறைப் பிரிவின் தலைவர் சூ.தவராசா தெரிவித்தார். (து-104)



யாழ்.நகரில் நேற்று சுட்டுக் கொல்லப்பட்ட தினமுரசு பத்திரிகை விற்பனையாளர்.....

## போசாக்கு மா விற்பனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகளிற்கான போசாக்கினை மேம்படுத்தும் பொருட்டு இலவசமாக சுகாதார போசாக்கு நலன் புரி அமைச்சினால் விநியோகிக்கப்படும் சோளம் சோயா மா கலவை உரியவர்களின் போசாக்கினை முழுமையாக வளம் படுத்துகின்றதா என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

ஏனெனில் பெருமளவில் இதனை தாய்மார்கள், குழந்தைகள் உணவாக உட்கொள்வதில்லை. காரணம் முன்பு சுவைமிக்கதான மா விநியோகிக்கப்பட்டதுடன் தற்போதைய மாவினை 750 கிராமுடைய ஒரு பைக்கற்றினை முப்பது ரூபா விலைக்கு விற்பனை செய்யும் நிலையும் காணப்படுகிறது.

இது விற்பனைக்கற்ற பொருள் எனினும் நுகர முடியாத நிலையில் விற்கப்படுவதாகத் தெரியவருகிறது.

வடமராட்சி போன்ற பிற பிரதேசங்களில் திரிபோஷா மா விநியோகிக்கப்படும் போது எமது பகுதிக்கும் அத்தகைய தரமான, விரும்பி உண்ணக்கூடிய மாவினை விநியோகிப்பின் மேலும் போசாக்கினை வளம்படுத்த முடியும் என தாய்மார்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ற-21)

## அரச நிறுவனங்களின் தரம் உயர்த்தப்பட வேண்டும்

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் தரத்தை உயர்த்துவதன் மூலமே தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க முடியுமென பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களை தனியாருக்கு விற்பது கூட்டமைப்பு அரசின் கொள்கை அல்ல என அவர் கூறினார்.

நேற்றுக்காலை சங்கராஜ மாவத்தையில் கட்டடப் பொருட்கள் கூட்டுத் தாபனத்தின் புதிய காட்சி அறையைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச நிறுவனங்களை புனரமைப்புச் செய்வதன் மூலம் அவற்றின் தரத்தை அதிகரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-7)

## வீடுகளை வாடகைக்கு விடுவோரை விழிப்புடன் செயற்பட அறிவுறுத்தல்

(கொழும்பு)

வீடுகளை வாடகைக்கு எடுக்கும் நபர்கள் குறித்து வீட்டு உரிமையாளர்கள் அவதமானமாக இருக்க வேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ எச்சரித்துள்ளார்.

அதிக வருவாய் பெறும் நோக்குடன் வீடுகளை வாடகைக்கு விடுகின்ற போதிலும் வாடகைக்கு வீடுகளில் இருப்பவர்கள் குறித்த தகவல்களை அறிந்து கொள்வது அவசியம் என்று பொலிஸ்மா அதிபர் மேலும் கூறியுள்ளார்.

பாதாள உலகக் கோஷ்டியினரும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களும் அதிக விலை கொடுத்து வீடுகளை வாடகைக்குப் பெறுவதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இத்தகைய நபர்களுக்கு வீடுகளை வாடகைக்கு விடும் வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## படிகளுக்கு மாந்நீடு பொதுமக்கள் விசனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தை மீன் சந்தை வியாபாரிகள் நிறுவைப்படிகளாக அப்பளக் கட்டை 50 கிராம் படிக்காகவும், 250 கிராம் நிறைக்காக சைக்கிள் ஆர்ம் அச்சினையும் வேறு பாசலாக கட்டப்பட்ட பொருட்களையும் பயன்படுத்தும் நிலை காணப்படுகின்றது.

வருடாந்தம் நகரப் பகுதி நிறுவனக் கருவிகள், படிகள் நிறுத்தல் அளவைகள் பகுதியினரால் முத்திரையிடப்படுகின்ற போதிலும் பல்வேறு பொருட்களை நிறுவைக்காக பயன்படுத்துவது குறித்து சம்பந்தப்பட்டோர் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற-21)

## முத்தமிழ் கிராம அபிவிருத்திக்கு ஐ.நா. அபிவிருத்திமையம் நிதி உதவி

(பொன்னாலை)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி மையம் அராலி மேற்கு முத்தமிழ் கிராமத்தைப் அபிவிருத்தி செய்வதற்கு முன்வந்திருக்கின்றது.

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இக்கிராமத்தை அபிவிருத்தி செய்து கொடுக்குமாறு விடுத்த கோரிக்கையடுத்தே ஐநா.அபிவிருத்தி மையம் முன்வந்துள்ளது.

பொது மண்டபம் அமைத்தல், மலசல கூட வசதிகள் செய்தல், வீதி புனரமைத்தல், சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கல் போன்ற அபிவிருத்தி வேலைகளை ஐ.நா.அபிவிருத்தி மையம் மேற்கொள்ளவுள்ளது.

இதற்கென ஐ.நா.அபிவிருத்தி மையம் சுமார் 80 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருப்பதாக அறிய முடிகிறது. (அ-49)

## மிக்சியுடன் மாயமானார்!

(கொழும்புத்துறை)

இந்தியாவிலிருந்து கொண்டுவந்ததாகக் கூறிக் கொண்டு வியாபாரியொருவர் 4000 ரூபாவுக்கு விற்பனை செய்த 'மிக்சி' அடுத்தநாளே பழுதாகிவிட அதனைத் திருத்தித்தருவதாகக் கூறி அதனைக் கொண்டு சென்ற அவ்வியாபாரி தலைமறைவாகி விட்டார்.

இச்சம்பவம் அண்மையில் கொழும்புத்துறை கிழக்கில் நடைபெற்றது.

இந்தியாவிலிருந்து கொண்டு வந்ததாகக் கூறிக்கொண்டு பலர் பல்வேறு பொருட்களை கொழுத்புத்துறை உட்பட்ட கரையோரப் பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றார்கள்.

அத்தகைய வியாபாரிகளில் ஒருவர் தரமான பொருள் எனத் தம்பட்டமடித்து விற்பனை செய்த 'மிக்சி' அடுத்த நாளே பழுதாகிவிட அதனைத் திருத்தித் தருவதாக எடுத்துச் சென்றவர் 4 நாட்களாகியும் அப்பகுதியில் காணப்படவில்லையெனப் பொருளை இழந்தவர் தெரிவிக்கின்றார். (து-51)

## மோட்டார் சைக்கிள் திருடர்கள்

கொடிகாமம் புத்தூர்ச் சந்திக்கருகே உள்ள மோட்டார் சைக்கிள் சேவிஸ் நிலையத்தில் கையடக்கத் தொலைபேசியொன்று சேவிஸ் செய்விக்க வந்த இரு இளைஞர்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மோட்டார் சைக்கிள் சேவிஸ் செய்ய வந்த இரு இளைஞர்கள் தமது கையடக்கத் தொலைபேசிக்குப் பற்றரி சார்ஜ் முடிந்துவிட்டது எனக் கூறி சேவிஸ் நிலையத்தில் சார்ஜர் போடப்பட்டிருந்த போனை கழற்றிவிட்டு தமது போனை சார்ஜ் செய்து தருமாறு கோரினர். இதற்கு உடன்பட்ட உரிமையாளர் சார்ஜ்ச் செய்ய அனுமதித்தார்.

இளைஞர்களின் சேவிஸ் வேலை முடிந்து அவர்கள் சென்றபின் உள்ளறையில் பார்த்த போது ஏற்கனவே அதில் சார்ஜ் செய்ய வைக்கப்பட்ட நண்பர் ஒருவரது போ-ன் இவர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது தெரியவந்தது. (து-21)

# இன்று ஒரு தகவல்

## மருமகள்மார் கவனிக்கவும்

ஒரே ஒரு ஊரில் ஒரு பெண்மணி இருந்தார். அவருக்கு ஒரேயொரு மகன். மகனுக்கு மிகுந்த அக்கறையோடு திருமணம் செய்து வைத்தார். திருமணம் முடிந்ததும் மருமகள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அப்பாடா என் கடமை முடிந்துவிட்டது. இனிமேல் அக்கடாவென்று எங்கேயாவது ஒரு மூலையில் படுத்துக் கிடக்கலாம் என்று நினைத்தார் அந்தப் பெண்மணி.

ஆனால் நினைக்கின்றபடி என்ன நடக்கிறது சார்? அதற்குப் பிறகுதான் பிரச்சினையே ஆரம்பமானது. மருமகளின் குணம் சரியில்லை. ஒரு மாதிரி! அந்தப் பெண் வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாக மாமியாரைப் பார்த்து "அதுதான் நான் வந்து விட் டேனே! இனி மேல் உங்களுக்கு இங்கு என்னவேலை? புறப்படவேண்டியதுதானே காசி ராமேஸ்வரம் என்று எங்காவது?" என்றாள்.

மாமியார் பார்த்தார். கொஞ்சம் யோசித்து விட்டு "இதோ பாரம்மா... நீ இப்படிச் சொல்வதற்கு முன்பே நான் வீட்டை விட்டுப் புறப்படவேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன் வீட்டை மட்டுமல்ல இந்த உலகத்தை விட்டுப் போவதற்குக் கூட நான் தயா ராக இருக்கிறேன். ஆனால்... ஒரேயொரு விடயத் திற்காக என் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். "என்ன விஷயம்?" என்று கேட்டாள் மருமகள். "வேறு ஒன்று மில்லை... என் பிள்ளைக்கு கல்யாணம் செய்து வைத்தேன். ஒரு பேரப்பிள்ளை பிறந்து அவனை என் கண்ணால் பார்த்துவிட்டேன் என்றால் நான் எங்கு வேண்டுமானலும் போவதற்கு தயாராக இருக்கிறேன்" என்றார் மாமியார்.

மாமியார் இப்படிச் சொல்வதில் நியாயம் இருப்பதாகப்பட்டது அந்த மருமகளுக்கு. சரி அப்படியே இருக்கலாம் என்று அனுமதி கொடுத்தாள். கொஞ்ச காலத்தில் ஒரு பேரன் பிறந்தான். அந்த அம்மாவும் பேரனைக் கண்ணால் பார்த்துவிட்டார். "சரி... பேரனை பார்த்தாகி விட்டது. இனிமேல் புறப்படவேண்டியது தானே " என்றாள் மருமகள். மாமியார் சொன்னாா 'நீ சொல்வதும் சரிதான் அதில் ஒன்றும் தப்பு இல்லை. எனது பேரன் உங்களை அம்மா அப்பா என்று கூப்பிடுவதை என் காது குளிர கேட்டுவிட்டுப் போகிறேனே" என்றார். "சரி... அந்த ஆசையும் நிறைவேறட்டும்" என்று காத்திருந்தாள் மருமகள்.

பேரன் வளர்ந்தான், நடந்தான், பள்ளிக் கூடம் போனான். பெரியவன் ஆனான். மருமகளும் மாமியாரை விரட்ட ஆரம்பித்தாள். "இன்னும் புறப்பட வில்லையா?" என்று. 'இதோ பாரம்மா! இதுவரைக்கும் இருந்து விட்டேன் பேரனின் கல்யாணத்தையும் கண்ணால் பார்த்தால் தான் இந்தக் கட்டைக்கு நெஞ்சுவேகும் போலிருக்கிறது' என்றார் மாமியார்.

இதுவும் நியாயமான ஆசையாகத்தான் பட்டது மருமகளுக்கு. சரியென்று ஒத்துக்கொண்டாள். பேரனின் கல்யாணமும் முடிந்துவிட்டது. இனிமேல் ஒரு நொடி கூட இங்கே இருக்கக் கூடாது புறப்படுங்கள் என்று மாமியாரை விரட்டினாள் மருமகள். இப்போது அந்த மாமியார் தனது மருமகளை நிமிர்ந்து பார்த்து "இதோ கிளம்பி விட்டேன் அம்மா... என் மூட்டை முடிச் செல்லாம் கட்டி விட் டேன். புறப்பட்டும் விட்டேன் அப்படியே நீயும் உனது துணிமணிகளை மூட்டை கட்டிக்கொண்டு புறப்படு. சேர்ந்து போகலாம்" என்றார். மருமகள் முழித்தாள். "முழிக்காதே...! உனக்கும் ஒரு மருமகள் வந்து விட்டாள் இனி மேல் நீயும் ஒரு மாமியார் தானே! உனக்கு இனி மேல் இங்கு என்ன வேலை? புறப்படு" என்றார் மாமியார். அப்போதுதான் அந்த மருமகளுக்கு தனது தவறு புரிந்தது. இந்தத் தகவலைக் கேட்டுக் கொண்டிருக்கும் மருமகள்களும் இதைப் பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் மாமியார்கள் சார்பாக.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஒரு கல்யாண வீட்டில் ஒரு பெண்ணுடன் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் என்னிடம் "சார் எனக்குத் திருமணமாகி 15 வருடம் ஆகிறது. நான் எனது மாமியாருடன் சண்டை பிடித்ததே இல்லை" என்றார் மிக அடக்கமாக. "அது எப்படி சாத்தியம் ?" என்று கேட்டேன். "எனக்கு கல்யாணமாகி 15 வருடம் தான் ஆகிறது. ஆனால் என் மாமியார் இறந்து போய் 20 வருடமாகிறது" என்கிறார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

போதைப்பொருள் தடுப்புப் பொலிஸார் தாக்கப்பட்டமை;

# பொலிஸ்மா அதிபரின் கூற்றினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிர்ச்சி

(கொழும்பு)

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் 5 நட்சத்திர ஹோட்டலில் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரை தாக்கிய விடயம் தொடர்பிலான பொலிஸ்மா அதிபரின் கூற்றினால் போதைப்பொருள் தடுப்புத் திணைக்கள அதிகாரிகள் ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேர்வின் சில்வாவின் மகன் பொலிஸாரைத் தாக்கியதற்கு எதுவித ஆதாரமும் இல்லையெனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், பொலிஸார் கடமையில் இருந்த போது தாக்கப்பட்டதற்கும் சான்றுகள் இல்லையெனத் தெரிவித்திருந்தார்.

ஆனால், பொலிஸார் கடமையில் இருந்த போது தாக்கப்பட்டனர் என திணைக்கள அதிகாரிகள் உறுதிபடக் கூறுகின்றனர்.

மேலும் பொலிஸார் தேடுதல் நடாத்தும் அனுமதிப்பத்திரத்துடன் அங்கு சென்றிருந்தாலும் அவர்களை நடவடிக்கை எடுக்க அனுமதிக்கவில்லை என்றும் பிரதி அமைச்சர் தனது மகனை நீதிமன்றில் கூட ஆஜர்படுத்தாமல் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது தொடர்பிலும் இவ் அதிகாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இருப்பினும், விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தேவையேற்படின் நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா ஊடகங்களுக்கு எதிராகக் கடுமையான வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டதையடுத்து பொலிஸ்மா அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ர-6)

ஐ.நா.பொதுச்செயலாளர் பதவிக்கு

# இலங்கை வேட்பாளரை ஆதரிப்பது குறித்து பரிசீலித்து வருகிறோம்

-பாக். வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

இந்திய- இலங்கை இராணுவ ஒப்பந்தத்தால் எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என கொழும்பு வந்துள்ள பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் குர்சித் எம் கசூரி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு இறையாண்மையுள்ள நாடு. அதன் நலனுக்காக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளலாம் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லுறவு நீடித்து வருகிறது.

இந்திய -இலங்கை இராணுவ ஒப்பந்த சாத்தியம் குறித்து நாம் அறிந்திருக்கவில்லை. இருப்பினும் அத்தகைய ஒப்பந்தத்தால் எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. இதுகுறித்து மேலும் கருத்துத் தெரிவிக்க இயலாது.

இலங்கை இராணுவ அதிகாரிகள் பெருமளவில் இலங்கை அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கான இலங்கையின் வேட்பாளரை ஆதரிப்பது குறித்து பரிசீலித்து வருகிறோம். இருப்பினும் அது குறித்து கருத்து சொல்வதற்கு இது உகந்த காலம் அல்ல.

இலங்கையின் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது இலங்கையின் உள் விடயம். அதில் நாம் தலையிட விரும்பவில்லை. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மசூதிகளையும் வீடுகளையும் கட்டித்தர பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது என குர்சித் கசூரி மேலும் தெரிவித்தார். (து-4)

# ஹெல உறுமயவுடன் இணையமாட்டோம் பிக்கு முன்னணி பகிரங்க அறிவிப்பு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவுடன் இணைந்து செயல்படமாட்டோம் என்று தேசிய பிக்கு முன்னணி அறிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேசிய பிக்கு முன்னணியைச் சேர்ந்த அமில தேரர் இதனைத் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவினதும் தேசிய பிக்கு முன்னணியினதும் செயற்பாடுகளின் நோக்கங்கள் ஒன்றாக இருந்தாலும் அவர்களுடன் நாங்கள் இணைந்து செயல்பட முடியாது.

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதாகச் சொல்லுகிற ஹெல உறுமய பாராளுமன்றத்தில் பொதுக்கட்டமைப்பு தாக்கல் செய்யப்பட்ட போது பங்கேற்கவில்லை.

அவர்களது நடவடிக்கைகள் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. உண்மையாக தேசப்பற்றுள்ள சக்திகளோடு இணைந்து செயல்படவே நாங்கள் விரும்புகிறோம். ஆனால் ஹெல உறுமய போலியான அரசியலையே நடத்தி வருகிறது.

அவர்களது செயற்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதாக உள்ளது. அவர்களுடன் இணையும் எண்ணம் சிறிதள வேனும் இல்லை. குறிப்பாக ஜே.வி.பியுடன் இணையவே நாங்கள் தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (து-4)

# அமெ.வைத்தியக் குழுவினர் வவு.இல் வைத்திய முகாம்

(கொழும்பு)

அமெரிக்காவிலிருந்து வருகை தந்த 5 பேர் அடங்கிய வைத்திய குழுவினர் வவுனியாவில் கடந்த 8 நாட்களாக நடத்திய இலவச வைத்திய முகாமில் 12 ஆயிரம் மக்கள் பயன் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா ரயில் நிலையத்திற்கு முன்பாகவுள்ள விடுதியில் நடைபெற்ற இந்த வைத்திய முகாமில் பலதரப்பட்ட நோய்களுக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

யுத்தம் நடைபெற்ற பகுதிகளிலேயே சிகிச்சை முகாம்களை நடத்தி வருவதாக ஏற்பாட்டுக் குழுவின் இணைப்பாளரான பி.என். சேகர் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரம் வட மாகாணத்தின் மத்தியில் அமைந்துள்ளதனால் பலரும் வந்து தமது நோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு வசதியாக அதனைத் தெரிவு செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

10 மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த மருந்துப் பொருட்களுடன் வருகை தந்த இந்த வைத்தியக் குழுவினர் மிகுதி மருந்துகளை வவுனியா பொது வைத்தியசாலைக்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியா குழுவினருக்கும் அன்பளிப்புச் செய்துள்ளனர். (ரூ)

## மின்சாரசபை அதிகாரிகளுடன் ஜனாதிபதி முக்கிய சந்திப்பு

மின்சாரசபையை சீரமைப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் மின்சாரசபையின் உயர் அதிகாரிகளுக்குமிடையில் முக்கிய சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பு எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இலங்கை மின்சார சபையின் தற்போதைய நிலவரம் மற்றும் மறுசீரமைப்பு என்பன தொடர்பாக சந்திப்பின் போது விரிவாக ஆராயப்படவுள்ளது.

மின்சாரசபையின் தலைவர் ஆனந்த குணசேகர, அதன் முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா மற்றும் நிதி முகாமையாளர் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். மின்சாரசபையின் நிதியறிக்கை மற்றும் தர அறிக்கை என்பனவற்றை எடுத்து வருமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.(ச-4)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

## தான்கட்டிய கோபுரத்திலிருந்து குதித்து இராஜராஜசோழன் தற்கொலை செய்தாரா?

எஸ்.விஜயன்

42 பராசக்தி படத்திற்கான கதை வசனத்தை திரு.பத்மநாதன் அவர்களே எழுதினார் என்றும், கலைஞர் அதை எழுதவில்லை என்றும் பேராசிரியர் லெனின் கூறிய போது,

ஒருவரை ஒருவர் பார்த்தவாறு சிரித்துக்கொண்டோம்.

எமது சிரிப்பிற்கு அர்த்தங்கொடுத்த பேராசிரியர் தனது தகவலுக்குப் போதிய ஆதாரம் இல்லையென்று நாம் நினைப்பதாக எண்ணிக்கொண்டார்போலும்.

தான்கூறிய கருத்தை மேலும் வலுபடுத்த நினைத்த அவர் ஆரம்பத்தில் பராசக்தி படத்தின் எழுத்தோட்டத்தில், கதை வசனம் பத்மநாதன் என்று பெயர் இருந்ததாகவும், தற்போது அந்தப் பெயர் நீக்கப்பட்டுவிட்டதாகவும் கூறினார்.

இதனை அவர் கூறியபோது சிரிப்பொலி வேகமாக இருந்தது. எதுவாயினும் திரைப்படத்தின் ஊடாக முகமே கலைஞரையும், எம்.ஜி.ராமச்சந்திரனையும் அரசியல் களம் உள்வாங்கக் காரணமாயிற்று என்னும் கருத்தை பேராசிரியர் லெனின் ஏற்றுக்கொண்டார்.

பேராசிரியரின் கருத்துரையில் பல விடயங்களை அறியமுடிந்தது. ஒரு கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் சாதியத்தின் தற்போதைய நிலையென்ன என்று கேள்வி எழுப்பினார்.

சாதியத்தை ஒழிப்பதில் யாழ்ப்பாணத்து சமூகம் முன்னேற்றம் கண்டுவிட்டது. இந்தியாவைப்போல கல்வி முதல் தொழில்வாய்ப்பு வரை சாதியத்தைக் குறித்துக்காட்டும் முறைகள் எல்லாம் அங்கு கிடையாது எனக் கூறினோம்.

எமது பதிலுக்கு பேராசிரியர் மெல்லச் சிரித்துவிட்டு, சாதியத்தைக் குறித்துக் காட்டவில்லை என்பதற்காக சாதியம் ஒழிந்துவிட்டதாக கூறமுடியாதல்லவா? என்றார். அவரின் பதிலில் அமைந்த கேள்வி எம்மை மௌனமாக்க அந்த மௌனத்தைக் கலைக்க விரும்பிய பேராசிரியர் லெனின், கலப்புத் திருமணத்திற்கு யாழ்ப்பாணத்தில் அனுமதி உண்டா என்று கேட்டார்.

மீண்டும் எம்மிடம் மௌனம் நிலவிக்கொள்ள, குறித்த சாதியம் குறித்த தொழிலைச் செய்யவேண்டும் என்ற நிலை என்று மாறுகின்றதோ! அன்று தான் சாதிப்பாகுபாடும் மாற்றமடையும் என்றார்.

எனினும் தமிழகத்தில் இருக்கக்கூடிய சாதிய அடிமைத்தனம் யாழ்ப்பாணத்தில் மருந்துக்கும் இல்லை யென்ற உண்மையை ஏற்றுக்கொள்வதில் பேராசிரியர் காட்டிய தயக்கம், இரண்டு நாட்டுக்கும் இடையிலான தொடர்பின்மையின் விளைவாக இருக்கலாமென நாம் ஊகித்துக்கொண்டோம்.

### இராஜராஜசோழன் இறந்தது எப்படி?

லொயலாக் கொலிச்சின் தமிழ்த் துறைப் பேராசிரியரான லெனின் அவர்களுடனான கலந்துரையாடல் தமிழகத்தின் பல்வேறு தகவல்களை நாம் அறிவதற்குப் பேருதவியாக இருந்தது.

தமிழகத்தின் ஆலயங்கள், சிற்பச் சிறப்புக்கள் பற்றிய கருத்துக்கள் எழுந்தபோது, தஞ்சைப் பெருங் கோயில் கட்டிய இராஜராஜசோழன் பற்றி பேராசிரியர் லெனின் குறிப்பிட்ட தகவல் வியப்பானது.

தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுவித்த இராஜராஜசோழன் உயர்ந்த கோபுரத்தைக் கட்டுவித்தானே அன்றி மக்களின் வாழ்வியலை உயர்த்துவதற்கு அவன் உதவவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார்.

தஞ்சைப் பெருங்கோயிலின் வானுயர்ந்த கோபுரத்தைப் பார்த்துவிட்டு தமிழினத்தின் பண்பாடும், கலைத்துவமும் உயர்ந்துள்ளதாக எண்ணிவிடாதீர்கள். அதன் மறுபக்கத்தையும் பார்க்கவேண்டும் .

அந்த உயர்ந்த கோபுரத்தைக் கட்டுவதில் அந்தக்கால மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பார்கள். அதனால் அவர்கள் எத்தனை வேதனைப் பட்டிருப்பார்கள். இதை நினைத்துப் பார்த்தால், உயர்ந்த கோபுரம் தெரிவதற்குப் பதிலாக மக்களின் துன்பச்சுமையின் உயரமே தெரியும் என்றார்.

தமிழகத்தில் அரசியல்வாதிகள் எவரையுமே ஏற்றுக்கொள்ளாத பேராசிரியர், தமிழக மன்னர்களையும் விட்டு விடவில்லை. இராஜராஜசோழன், அவனது மகன் இராஜேந்திர சோழன் எல்லோருமே மக்களை வருத்தியதாகக் குற்றஞ்சாட்டினார்.

தஞ்சைப் பெருங்கோயிலிலுள்ள ராஜகோபுரம் உலக அதிசயங்களில் ஒன்றாக இருக்கும் நிலையில், அந்தக் கோபுரத்தை நிர்மாணித்த சிற்பியை இராஜராஜசோழன் கொலைசெய்ததாகப் பேராசிரியர் லெனின் கூறிய போது அவரின் உதடுகள் உதறிக் கொண்டன.

தஞ்சைப் பெருங்கோயிலை அமைத்த சிற்பியைக் கொலைசெய்ததால், பிற்காலத்தில் இராஜராஜசோழன் மனக்குழப்பம் அடைந்தான் என்றும், அதனால் அவன் தான் கட்டுவித்த தஞ்சைப் பெருங்கோயிலின் கோபுரத்தில் ஏறி அதிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டான் என்றும் பேராசிரியர் லெனின் கூறினார்.

இராஜராஜசோழன் கோபுரத்தில் ஏறி அதிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டான் என்ற செய்தியை பேராசிரியர் லெனின் கூறிய போது, என் இதயத்தின் ஒருசில அறைக் கதவுகள் ஒருகணம் ஒத்து மூடிக்கொண்டன.

இராஜராஜசோழன் தற்கொலை செய்துகொண்டானா? பேராசிரியரிடம் என் நா கேட்கத் துடித்தபோதும், அதற்கு என் இதயத்தின் ஒத்துழைப்பின்மையால் வெறும் துடிப்போடு நா அடங்கிக்கொண்டது.

அன்றிலிருந்து இன்றுவரை இராஜராஜசோழனின் மரணம் பற்றி அறியும் என் ஆவல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

என் சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதற்காக நான் அணுகிக் கொள்ளும் தமிழ் அறிவாளர் திரு.க. லோகநாதன் அவர்களிடம் அதுபற்றிக் கேட்டேன்.

தஞ்சைப் பெருங்கோயிலை நிர்மாணித்த சிற்பியை இராஜராஜசோழன் கொலை செய்ததான செய்திகள் வரலாற்றுக் குறிப்புக்களில் இடம்பெற்றுள்ளபோதிலும், அவரது இறப்புப் பற்றிய தகவல்கள் இல்லையென்பது அவரின் கருத்து. (நினைவுகள் வளரும்)

---

## தேசிய நாடகப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசுகள்!

### கொழும்பில் அமைச்சர் பௌசி வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட நாடகப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கான பரிசுகள் நேற்றுமுன்தினம் கொழும்பில் காசோலையாக வழங்கப்பட்டது.

சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பிரதி அமைச்சர் பந்துல பஸ்நாயக்க உட்பட மற்றும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

முதலாம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு 20 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்.இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு 15 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட மன்னார் புனித சவேரியர் கல்லூரிக்கு 10 ஆயிரம் ரூபாவும் காசோலையாக அமைச்சரால் வழங்கப்பட்டன.

இதேவேளை, இம் மூன்று நாடகங்களும் நேற்றுமுன்தினம் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

## விமான நிலையத்தில் பொதிகள் சூறை!

(கொழும்பு)

கடைவிலிருந்து விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கை வந்த தமிழ் குடும்பமொன்று கொண்டு வந்த பொதிகளில் இருந்த சொக்லட் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் விமான நிலையத்தில் வைத்து சூறையாடப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழ் குடும்பமொன்று விமானமூலம் கனடாவிலிருந்து லண்டன் ஊடாக கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. இவர்கள் தமது பொதிகளைப் பெற்றுக் கொள்ளச் சென்ற போது விமானம் மாறி வருகையில் பொதிகள் தவறிவிட்டதாக விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும், பின்னர் இவர்களது இரு பொதிகளும் கையளிக்கப்பட்ட போதும் பொதிகளில் இருந்த சொக்லட் மற்றும் அன்பளிப்புக்காக கனடாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருட்கள் என்பன அதிலிருந்து சூறையாடப்பட்டுள்ளன.

இதே குடும்பத்தவர்கள் சில நாட்களின்பின் இந்தியா சென்று திரும்பி வந்த போதும் இவர்களது பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன. இது தொடர்பாக குறித்த விமான சேவை நிறுவனத்தினரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போது அதற்கான நட்டஈட்டை வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

பொருட்களுக்கு நட்டஈடு தருவது இதற்குரிய சிறந்த தீர்வல்ல. இவ்வாறான சம்பவங்கள் இனிவரும் நாட்களில் நடைபெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட விமான சேவை நிறுவனத்தினர் மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்டவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற)

## மாதகல் பிரதேசத்துக்கு கெயர் நிறுவனம் உதவி

(யாழ்ப்பாணம்)

கெயர் நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாதகல் பிரதேசத்திற்கு 170 தும்புக்கண்ணாடி வள்ளங்களையும் மற்றும் இயந்திரங்கள், வலைகளையும் வழங்குவதற்கு முன்வந்திருந்தது.

இதன் முதற் கட்டமாகக் கடந்த திங்கட்கிழமை மாதகல் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு தொகுதிவலைகள் வழங்கப்பட்டன.

மிகுதி வலைகள் வள்ளங்கள், இயந்திரங்கள் ஆகியன தொடர்ந்தும் வழங்கப்படுமென வும் இவ் வேலைத்திட்டங்கள் யாவும் ஒகஸ்ட் மாத நடுப்பகுதிக்குள் பூர்த்தியாகிவிடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-19)

## உயர்தரப் பரீட்சை நிலையங்களாகச் செயற்படாத பாடசாலைகளுக்கு இரண்டாம் தவணை விடுமுறை இன்று

(கொழும்பு)

க.பொ.த.உயர்தரப் பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படாத சகல தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசாங்கப் பாடசாலைகளும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக இன்று தொடக்கம் மூடப்படவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எஸ். குணவர்த்தன அறிவித்துள்ளார்.

இவ்வாறு மூடப்படும் பாடசாலைகளில் தமிழ், சிங்களப் பாடசாலைகள் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படவுள்ளது.

எனினும் முஸ்லிம் பாடசாலைகள் மாத்திரம் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

இந்த ஆண்டு றம்ழான் நோன்பு விடுமுறைக்காக முஸ்லிம் பாடசாலைகளை மூடவேண்டியுள்ளதால் இரண்டாம் தவணை விடுமுறைக்காலம் குறிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,க.பொ.த.உயர்தரப் பரீட்சை நிலையங்களாக செயற்படும் தமிழ், சிங்கள, முஸ்லிம், பாடசாலைகளும் இரண்டாம் தவணைக்காக இன்று மூடப்படமாட்டாது எனவும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதியே இப்பாடசாலைகளுக்கு இரண்டாம் தவணை விடுமுறை வழங்கப்படும் என்றும் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் அறிவித்துள்ளார். (அ-9)

# அண்டவெளி ஆய்விற்கு அடிகோலும் தத்துவங்கள்

நவீன பௌதிகம் என்றதும் நமக்கு ஞாபகத்தில் வருபவர் அல்போர்ட் ஜன்ஸ்டைன். இருபதாம நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவரால வெளியிடப்பட்ட 'சார்பியற் தத்துவம்' (Theory of Ralativity) பற்றிய கட்டுரைகள் பௌதிகவியலின் வரலாற்றிலேயே மாபெரும் புரட்சியை ஏற்படுத்தின. புரட்சியென்றால் சாதாரண புரட்சியல்ல. பௌதிகத்தின் அடிததளத்தையே அடியோடு மாற்றிவைத்த புரட்சி.

இச் சார்பியற் தத்துவமும், சகதிச் சொட்டுப் பௌதிகமும் (Quantum Physics) இன்றைய நவீன பௌதிகத்தின் அடித்தளங்களாகக் கருதப்படுபவை. சார்பியற் தத்துவத்தைப் பொறுத்தவரையில் அது முழுக்க முழுக்க ஜன்ஸ்டைனின கோட்பாடே.

சக்திச் சொட்டுப் பௌதிகத்தின் ஆரம்ப கர்த்தாவாகவும் ஜன்ஸடைனையே கருதலாம். உண்மையில் ஜன்ஸ்டைனிற்கு நோபல் பரிசு கிடைத்ததே போட்டான்கள் பற்றிய கண்டுபிடிப்பிற்காகத்தான். இக் கண்டுபிடிப்பே சக்திச் சொட்டுப் பௌதிகத்தின் ஆரம்ப வளர்ச்சியாகும. உண்மையில் ஜன்ஸ்டைனிற்கு சார்பியற் தத்துவத்திற்காகவும் இன்னுமொரு முறை நோபல் பரிசு கொடுத்திருக்க வேண்டும்.

சரி, இந்தச் சார்பியற் தத்துவம் அப்படி என்னதான் கூறிவிடுகின்றது?

விடை மிகவும் சுலபம். 'நேரம', 'வெளி' பற்றிய கருதுகோள்களை அதாவது இதுவரை காலம் வெளி, நேரம் பற்றி நிலவி வந்த கோட்பாடுகளை சார்பியற் தத்துவம் அடியோடு மாற்றியமைத்து விடுகின்றது. அதேசமயம பொருள், சக்தி, புவியீர்ப்பு பற்றியும் புதிய கருதுகோள்களை முன்வைக்கின்றது. இசசார்பியற் தத்துவக் கோட்பாடுகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

1.சிறப்புச் சார்பியற் தத்துவம் (Special Theory of Relativity)

2.பொதுச் சார்பியற் தத்துவம் (General Theory of Relativity)

இவற்றில் 'சிறப்புச் சார்பியற்' தத்துவம் இதுவரை நிலவிவந்த வெளி, நேரம் பற்றிய கோட்பாடுகளை அடியோடு மாற்றியமைத்து விடுகின்றதென்றால், பொதுச் சார்பியற் தத்துவமோ புவியீர்ப்பு பற்றிய கோட்பாட்டை மாற்றியமைத்து விடுகின்றது.

## 'வெளி', 'நேரம்' பற்றிய கோட்பாடுகள்

ஆயிரக்கணக்கான வருடங்களாக நிலவிவந்த அரிஸ்டாட்டிலின் கோட்பாடுகளைப் பரிசீலனைக் குட்படுத்தியவர்கள் கலிலியோவும், சேர் ஐசக் நியூட்டனுமே.

ஆனால் வெளி, நேரம் பற்றிய இவர்கள் யாவரினதும் கோட்பாடுகள் ஒன்றாகவேயிருந்தன. வெளியையும் நேரத்தையும் சுற்றிவர நிகழும் இயக்கங்களால் எவ்விதப் பாதிப்பும் அடையாத சுயாதீனமானவைகளாகவே (Absolute) இவர்கள கருதினார்கள். சாதாரண மனித வாழ்வின் அனுபவங்களிலிருந்தே இவர்களும் வெளி, நேரம் பற்றிய கோட்பாடுகளை வகுத்திருந்தார்கள்.

எங்கும் எல்லையற்று விரிந்து பரந்து கடப்பதுதான் வெளி. 'எல்லாத திசையிலுமோர் எல்லையில்லா வெளி வானிலே' என்று பாரதி பாடியதைப் போல் எங்கும் வியாபித்துக கிடக்கின்றது வெளி. இந்த வெளியில்தான் சூரியன், கிரகங்கள் மற்றும் பல்வேறுபட்ட பொருட்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இத்தகைய இயக்கங்கள் இந்த வெளியைப் பாதிப்பதில்லை. அது தன்பாட்டில் வியாபித்துக் கிடக்கிறைது. இவ்வாறு தான் நியூட்டன வரையிலான விஞ்ஞானிகள் கருதினார்கள். இதுபோன்றுதான் 'நேரமும்' சுற்றிவர நிகழும் இயக்கங்களால் எவ்வித பாதிப்புமற்று தன் பாட்டில் இயங்கிக் கொண்டிருப்பதாக பௌதிக விஞ்ஞானிகள் கருதினர்.

## சிறப்புச் சார்பியற் தத்துவமும், வெளியும் நேரமும்....


இவவிதம் சுயாதீனமாகக் கருதப்பட்டு வந்த 'வெளி'யோ 'நேர'மோ உண்மையில் சுயாதீனமானவையல்ல. அவையும் சுற்றிவர நிகழும் இயக்கங்களால் பாதிப்புறுபவையே, சார்பானவையே என்பதை ஜன்ஸ்டைன் 'சிறப்புச் சார்பியற் தத்துவம்' மூலம் வெளிக்காட்டினார்.

உதாரணமாக, நேரத்தை எடுத்துக் கொண்டால் வேகம் நேரத்துடன் மாறுதல் அடைகின்றது. ஒளி வேகத்தில் செல்லும் ராக்கட்டில் ஒரு மனிதனையும் பூமியில் நிற்கும ஒருவனையும் கற்பனை செய்து கொள்ளுங்கள். இவர்கள் இருவருமே 'சீக்கோ' கடிகாரங்களைக் கைகளிலே கட்டியிருக்கின்றார்கள். இவர்கள் இருவரது கடிகாரங்களும் நேரம சுயாதீனமானதாகவிருந்தால் ஒரே நேரத்தைக் காட்ட வேண்டும் ஆனால், நேரம் சார்பானதாகவிருப்பதால், இருவரது கடிகாரங்களும் இருவேறு நேரங்களையுமே காட்டும. உண்மையில் வேகம் கூடக்கூட நேரம் மாறுவதும் குறையவே தொடங்கும். ஒளி வேகத்தில் செல்லும் ராககட்டில் இருப்பவனிற்கு அவனிற்குச் சார்பாக ஒரு மணித்தியாலம் சென்றிருக்கும் அதேசமயம் பூமி யிலிருப்பவனிற்கோ பல நூறு வருடங்கள் சென்றிருக்கும். இவ்விதம் நேரமானது வேகத்துடன் மாறுவது விஞ்ஞானபூர்வமாக நிருபிக்கப்பட்ட உண்மை.

இதற்காக விஞ்ஞானிகள் இருமபு அணுக்கருக்களுடன் காமாக் கதிர்களை இரு வேறு உயரங்களில் மோதவிட்டுப் பார்த்தார்கள. உயரத்தில் நேரம் வேகமாகச் செயற்படுகின்ற காரணத்தால் காமாக் கதிர்களை உறுஞ்சும்இரும்பு அணுக்கருக்களின் போக்கு வித்தியாசப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## வெளியும், பொருளும்

இதுபோல் தான் சுயாதீனமாகக் கருதப்பட்டு வந்த வெளி (space) கூட நேரம் போல் பாதிப்படைகின்றது. ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் அதன் பொருண்மை கூடக்கூட அப்பொருளானது தன்னைச சுற்றியிருக்கும் வெளியை வளைக்கத் தொடங்கி விடுகின்றது வெளியையாவது வளைப்பதாவது... வளைப்



பதற்கு வெளியென்ன ஒரு பொருளா?... என நீங்கள் கேட்கலாம். நியாயமான கேள்விதான். ஆனால் இவ்விதம வெளியைப் பொருளின் பொருண்மை வளைப்பது நிரூபிக்கபட்ட உண்மை.

புதன் கிரகமானது சூரியனைச் சுற்றி வரும் ஒழுக்கில் ஒரு சிறு வத்தியாசம் இருந்து வந்தது. இந்த வித்தியாசத்தின் காரணத்தை நியூட்டனின் கோட்பாடுகளினால் விளக்க முடியவில்லை. ஜன்ஸ்டைனின் சார்பியற் கணித சூத்திரங்களோ இவ்வித ஒழுக்கில் காணப்படும் மாற்றத்திற்குக் காரணம் சூரியன் அதனைச் சுற்றியுள்ள வெளியினை வளைத்து விடுவதே என்பதை எடுதது்க் காட்டின. இது பின்னர் பிரிட்டனைச் சேர்ந்த வானியல் அறிஞரான சேர் ஆர்தர் எடிங்டனால் சூரிய கிரகணமொன்றை அவதானித்தபொழுது நிருபிக்கப்பட்டது.

## பொதுச் சார்பியற் தத்துவமும் புவியீர்ப்பும்

புவியீர்ப்பைப் பொறுத்தவரையில் நியூட்டன் அதனை ஒரு விசையாகவே கருதினார். ஆனால் ஜன்ஸ்டனின பொதுச் சார்பியற் தத்துவமோ சூரியன் தன்னைச் சுற்றியுள்ள வெளியினை வளைத்து விடுவதன காரணமே பூமியினைச் சூரியனைச் சுற்ற வைத்து விடுகின்றதென்பதை எடுத்துக்காட்டியது.

இவ்விதமாக அரிஸ்ட்டாடிலின கோட்பாடுகளையே ஆட்டங்காண வைத்த நியூட்டனின் கோட்பாடுகளையே இவரின் கோட்பாடுகள் ஆட்டங்காண வைத்துவிட்டன. ஜன்ஸடனின் சார்பியற் கோட்பாடுகள் சாதாரண மனித அனுபவங்களிற்கப்பாற்பட்டு சம்பவங்கள் நடைபெறும் போதே ஜன்ஸ்டனின் சார்பியற் கோடபாடு களைப் பூரணமாக உணர முடியும மிகப் பிரமாண்டமான வேகத்தில் செல்லும போதே நேரம் மாறுவதை இலகுவாக அவதானிக்க முடியும். அதனை, அம்மாற்றத்தினை சாதாரண மனித சக்திக்குட்பட்ட வேகத்தில் அவதானிக்க முடியாது. ஏனென்றால்.. மாற்றம் அவ்வளவு சிறியதாக இருந்து விடுகின்றது.

**இணையப் பார்வை**

மேலும் வெளியையும் நேரத்தையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பதையும் சார்பியற் கோட்பாடுகள் எதிர்க்கின்றன. வெளி நேரச் (space time) சம்பவங்களின் தொகுப்பாகவே உண்மையில் ஜன்ஸ்டனின் சார்பியற கோட்பாடுகள் விளககுகின்றன. இவ்விதமாக இப்பிரபஞ்சததை உண்மையில் தெளிவாகத் துல்லியமாகச் சாியாக மேற்படி ஜன்டனின் சார்பியற் கோடபாடுகள் விளக்கி வைக்கின்றன.

(ந)

# தேசிய மட்டப் போட்டிக்குக் கண்டி செல்லும் யாழ்.மாவட்ட சம்பியனான சென்பற்றிக் அணி

(சுண்டுக்குளி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன இலங்கை பாடசாலைகள் சம்மேளனம யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்திய உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த 25, 26ஆம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி ஆடுகளத்தில் யாழ் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளையின் தலைமையில் யாழ். உதைபந்தாட்ட வலய பாடசாலைகளின் செயலாளர் எம்.பேட்டி பனிஸ்ரர் நெறிப்படுததலில் நடைபெற்றன.

இப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் ஒன்றில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை எதிர்த்து யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆடியது. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில இரு அணிகளும் கோல் எதையும் போடாததினால் வெற்றி தோல்வியை கணிப்பதற்காக இரு அணிகளுக்கும் 05 மேலதிக உதைகள் கொடுக்கப்பட்ட போது சென் பற்றிக்ஸ் அளவெட்டி அணி 2:1என்ற கோல் கணக்கில் வென்றது. இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக ஏ.கேவுன, ஏ.யூட்மன், எஸ்.சுரேந்திரன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இனனொரு அரையிறுதி ஆட்டத்தில் நெல்லியடி மகாவித்தியாலய அணி யாழ்.மத்திய கல்லூரி அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வென்றது. இவ் ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாக றெட்சன், பி.அகிலநாயகம், ஏ.கெனடி ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இறுதி ஆட்டத்தில் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி நெல்லியடி மகா வித்தியாலய அணியை எதிர்தது மோதியது. இரு அணிகளும் கோல எதையும் போடததினால் இரு அணிகளுக்கும் தலா 05 மேலதிக உதைகள் கொடுக்கப்பட்ட போது யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது. இவ் ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாக ஏ.யூட்மன், ரி.றெட்சன், ஏ.கேவின் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

11 பாடசாலைகளின் அணிகள் பங்கு பற்றிய இப்போட்டித் தொடரில சம்பயனான சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி இன்றும்,நாளையும், நாளை மறுதினமும் மற்றும் 1ஆம் திகதியும கண்டியில் நடைபெறவுள்ள இலங்கைத் தீவு மட்டத்திலான போட்டிகளில் கலந்துகொள்ள நேற்று கண்டிக்குச் சென்றது.

இறுதிநாள் நிகழ்வில் முதன்மை விருத்தினராக யாழ்.வலய பாடசாலைகளின் உதைபநதாட்ட தலைவரும் யாழ்.மத்திய கல்லூரியின் அதிபருமான இ.இராசதுரையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியின் உப அதிபர் அருட்திரு. ஜெறோ அடிகளாரும் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க தலைவர் கப்ரின் D.A.M குணசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(அ-110)

# தரம் Iக்கு மாணவர்களைச் சேர்க்கப் புதுத்திட்டம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு அரசாங்கப் பாடசாலைகளுக்கு தரம் I வகுப்புகளுககான- மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது பின்பற்றப்படும் நடைமுறைகள் தொடர்பான விபரங்களைக் கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி 5 வயதைப் பூர்த்தி செய்யும் சிறுவர், சிறுமியர்கள பாடசாலைகளில் சேர்வதற்கு தகுதியுடைவர்களாவர். 6 வயதுக்குக் குறைவான பிள்ளைகள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் குறித்த பாடசாலைகயில் வெற்றிடம் காணப்படுமிடத்து 6 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் சேர்த்துக கொள்வது பற்றி கவனம் செலுத்தப்படும்.

ஒவ்வொரு வகுப்பிலும் 35 மாணவர்கள் சோத்துக் கொள்ளப்படவுளளனர். பாடசாலை அமைந்துளள பிரதேசத்தின் பிரதான குடியிருப்பாளர்களின் பிள்ளைகளுக்கு 40 சதவீத இட ஒதுக்கீடும் பாடசாலை பழைய மாணவர்களின்பிள்ளைகளுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடும் அதே பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் சகோதரர்களுக்கு 15 சதவீத ஒதுக்கீடும் இடமாற்றம் பெற்று வரும் உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் பிரதான குடியிருப்பாளர் அல்லாத நிரந்தர குடியிருப்பாளர் ஆகியோரின் பிள்ளைகளுக்கு 14 சதவீத இட ஒதுக்கீடும் வழங்கப்படும்.

இதுதவிர பாடசாலையில் கடமையாற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு 4 சதவீத இட ஒதுக்கீடும் வெளிநாட்டவர்களின் பிள்ளைகளுக்கு 2 சதவீத இட ஒதுக்கீடும் வழங்கப்படவுள்ளதாகக் கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் அறிவித்துளளார்.

(து-2)

# பாஸ் நடைமுறையை நீக்கக் கோரிக்கை

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்கள் பாஸ் எடுக்காமல் கடல் தொழில் புரிவது போல் தீவகம், குருநகர், பாஷையூர் பகுதி மீனவர்களும் பாஸ் எடுக்காமல் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான வசதியை இப்பகுதியில் உள்ள கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து தர வேண்டும் என இப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இவ் விடயத்தில் கடற் தொழிலாளர் சம்மேளனமும் கூடிய அககறை காட்ட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் குருநகர் பகுதியில் மின்சார வேலியில் அகப்பட்டு இளைஞர் ஒருவர் பலியாகியதை அடுத்து பாஸ் நடைமுறை தளர்த்துவது பற்றி மூன்று நாட்களில் அறிவிப்பதாகக் கூறிய படையினர் தொடர்ந்தும் பாஸ் நடைமுறையை இறுக்கமாக அமுல்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

(து-43)

# மீட்டல் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் தரம் II "அ" பிரிவினருக்கான மீட்டல் வகுப்பு உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தினால் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடத்தப்பட்டது.

இப பரீட்சை அடுத்தமாதம் 6ஆம் திகதி நடைபெறவிருப்பதால் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தினால் நடத்தப்படும் மீட்டல் வகுப்புக்கள் நாளையும் நாளை மறுதினமும் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக உள்ளூராட்சி எழுது வினைஞர் சங்கச் செயலாளர் என்.சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

(து-19)

# வடக்கில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினையை தீர்க்க அரசு நடவடிக்கை

(புத்தளம்)

வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கும் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுககப்படும் என்றும் இடம்பெயர்ந்த மக்களின் பிள்ளைகளது கல்விமேம்பாட்டை அரசாங்கம் தனது கடப்பாடாகக் கொண்டிருக்கின்றது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் உள்ளிட்ட பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் நலன்களைக் கவனிக்கக்கூடிய பணியகத்தை அண்மையில் புத்தளத்தில் திறந்து வைத்து உரையாற்றும் போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

(து-2)

# நீர் விநியோகக் குழாய் திருத்தம்






ஆனைப்பந்தி, ஆரியகுளம் பகுதி மக்களுக்கு நீர் விநியோகம் செய்து வரும் பிரதான நீர் விநியோக தாங்கியின் கிழக்குப் பக்கமாகவுள்ள நா விநியோகக் குழாயில் பொருத்தப்பட்டுள்ள 5" வால்வு 15 வருடகாலததுக்கு மேற்பட்ட தாகையால சீராக வேலை செய்ய முடியாத நிலையில் இருந்த தால அப்பகுதி மக்களுக்குச் சீராக நீர்விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இருப்பினும யாழ்.மாநகரசபை நீர்வேலைப் பகுதி பொறியியலாளர், உத்தியோகத்தாகள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையல் இரவு நேரங்களில் தங்களிடமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளத்தைப் பயன்படுத்தி பழைமை வாய்ந்த நீர் விநியோகக் குழாயைத் திருத்திய மைத்து நீர் விநியோகத்தைச் சீர்ப்படுத்தியுள்ளனர். (து)




வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை (கொக்குவில்)

திருவருள்மிகு ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தானம்

## மஹோற்ஸவ விஞ்ஞாபனம்

**பார்த்திப வருஷம் (2005)**

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆடித்திங்கள் 13ம் நாள் (29.07.2005) வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி ஆடிப்பூரதினமாகிய 22ம் நாள் (07.08.2005) ஞாயிற றுக்கிழமை தீர்த்தோற்ஸவத்தினமன்று நிறைவுபெற அம்பிகை திருவருள் பாலித்திருபபதால் அடியார்கள் இக்காலங்களில் ஆலயத்தற்கு வருகை தந்து அம்பிகையைத் தரிசித்து மென்மேலும் அருள்பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**உற்சவ கால நிகழ்வுகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29-07-2005 | வெள்ளி | காலை | 10.00 | மணி | கொடியேற்றம் |
| 30-07-2005 | சனி | காலை | 11.00 | மணி | பூச்சொரிதல் திருவிழா |
| 31-07-2005 | ஞாயிறு | காலை | 10.30 | மணி | வேதபாராயணத் திருவிழா |
| 01-08-2005 | திங்கள் | இரவு | 08.00 | மணி | கைலாச வாகனம் |
| 02-08-2005 | செவ்வாய் | காலை | 10.30 | மணி | பக்த முக்தி பாவனோற்ஸவம் |
| 03-08-2005 | புதன் | காலை | 10.30 | மணி | சிவபூஜைத் திருவிழா |
| 04-08-2005 | வியாழன் | இரவு | 08.00 | மணி | குதிரைவாகனத் திருவிழா |
| 05-08-2005 | வெள்ளி | இரவு | 08.00 | மணி | சப்பரத்திருவிழா |
| 06-08-2005 | சனி | காலை | 10.30 | மணி | இரதோற்ஸவம் |
| 07-08-2005 | ஞாயிறு | காலை | 10.30 | மணி | தீர்த்தோற்ஸவம் |
| | | மாலை | 04.00 | மணி | கொடியிறக்க வைபவம் |

**உற்சவ காலப் பூஜை ஒழுங்குகள்**

அபிஷேகம் தினசரி காலை 8.30 மணிக்கும், பூஜை மாலை 5.30 மணிக்கும், வசந்த மண்டப பூஜை காலை 10.30 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் நடைபெறும்.

**விசேட தினங்களில் வசந்தமண்டப பூஜை**

கொடியேற்றம் காலை 8.30 மணி இரதோற்ஸவம் காலை 9.00 மணி
தீர்த்தோற்ஸவம் காலை 7.45 மணி
08.08.05 திங்கட்கிழமை பி.பகல் 3.00 மணிமுதல் வள்ளிதேவசேனா முருகப்பெருமானுக்கு

**"திருக்கல்யாண வைபவம்"**

தொடர்பான நிகழ்வுகள் நடைபெறும். அடியார்கள் உற்சவ காலங்களில் அபிஷேகத்துககுரிய பால், தயிர், இளநீர் போன்றவற்றையும், புஷ்பம், பூமாலை போன்றவற்றையும் கொடுப்பது சாலச்சிறந்தது.

**தினமும் மதியவேளை மகேஸ்வரபூசை நடைபெறும்.**

**நித்திய மேளம் N.R.நிர்மலன் குழு கோண்டாவில்.**

**தர்மகர்த்தா சபையும்,**
**இந்து இளைஞர் மன்றமும்,**
**உபயகாரர்களும்.**

**தேவஸ்தானம்,**
**ஆனைக்கோட்டை.**

C/(1491)

*விளம்பர அனுசரணை:* மகாநதி ஜ்வெல்லறி
72A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# கல்வி மேம்பாட்டு அபிவிருத்தித் திட்டங்கள் முழுமையாகச் செயற்படுத்தப்பட வேண்டும்

## வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்

(பருத்தித்துறை)

"மாணவர்களின் கல்வி அபிவி ருத்தி மேம்பாடுகள் கருதி மேற்கொள ளப்படும் கல்வி அபிவிருத்தித் திட் ங்கள் முழுமையாகச் செயற்படுத் 'படவேண்டும். அப்போதுதான் ணவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும். கல்வியமைச்சின் நவோதய பாடசாலைத்திட்டம் வளம் குறைந்த பாடசாலைகளுக்கு வரப்பிரசாதமாகும்".

இவ்வாறு, வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜா பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண் கள் உயர்தரப் பாடசாலையின் நவோ தய வார இறுதிநாள் நிகழ்வுகளி லும கண்காடசியிலும பிரதம விருந் தினராகக கலந்துகொண்டு உரை யாற்றும்போது குறிப்பிட்டார்.

இவ்வைபவம் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன் தலைமையில் நடை பெற்றது.

வலயக் கலவிப்பணிப்பாளர் செல்வராஜா தொடர்ந்தும் உரை யாற்றுகையில்,

நவோதயப் பாடசாலைத் திட்டத் தின கீழ் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 42 பாடசாலைகளும் நாடளாவியரீதி யில் 314 பாடசாலைகளும் திட்டங் களைச் செயற்படுத்தி வருகின்றன.

தென்பகுதிப் பாடசாலைகள் நவோதயப் பாடசாலைத்திட்டத் தின கீழ் பெரு நன்மைகளைப் பெற்று அபிவிருத்தி கண்டுள்ளன.

எமது பகுதிப் பாடசாலைகள் நாட்டின் யுத்தகாலச் சூழ்நிலைக ளால் இத்திட்டத்தின் மூலம் போதிய நன்மைகளைப பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது.

எனினும், தற்போதைய சூழ் நிலையில் இத்திட்டங்கள் மூலம் பெறக்கூடிய முழுமையான பயன்க ளையும் பெற்றுக்கொள்ள முயற் சிக்கவேண்டும். இதில் அதிபர், ஆசிரி யர்கள், பெற்றோர்கள், மாணவர் கள், நலன்விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோர் இணைந்து சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

இப்பாடசாலை சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட பாடசாலை. இப்பாடசாலையின் அபிவிருத்திக் குப பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசி யம் உள்ளது.

இப்பாடசாலை நவோதய பாட சாலைத் திட்டதைச் சிறப்பாக மேற் கொண்டுவருவது பாராட்டப்பட வேண்டியதாகும் என்றார்.

மாணவிகளின் கல்விக் கண் காட்சியை வலயப் பிரதிக் கல்விப பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் சம் பிரதாய பூர்வமாக நாடாவை வெட் டித் திறந்துவைத்தார். தொடர்ந்து மாணவிகளின் கலை நிகழ்ச்சிக ளும் இடம்பெற்றன. (ந-52)

# சமாதான நீதிவான் பதவியேற்பு

(பொன்னாலை)

சங்கானை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் பொன்.அச்சுதம பிள்ளை அகில இலங்கைச் சமா தான நீதிவானாகக் கடந்த மாதம் சத்தியப் பிரமாணம் செய்து கொண் டார்.

யாழ்ப்பாணம் பதில் மாவட்ட நீதி பதி முன்னிலையில் கடந்த மாதம் 27ஆம் திகதி இவர் சமாதான நீதி வானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (ந-49)

# அதிபர் நியமனம்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் புதிய அதிபராக ஏ.விஜ யநாதன் கல்வித்திணைக்களததால நியமிக்கப்பட்டுள்ளார்.

இக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய எஸ்.அரியரத்தினம பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் செய் யப்பட்டுள்ளார். (ந-52)

# இலக்கிய விழாவை ஒட்டி வலிமேற்கில் போட்டிகள்

(பொன்னாலை)

வலி.மேற்கு கலாசாரப் பேரவை தனது கலை இலக்கியப் பெரு விழாவையொட்டி இளைஞர், யுவதி களுககிடையே கலை இலக்கிய போட்டிகளை நடத்தவுள்ளது என்று கலாசாரப் பேரவையின் தலைவரும வலி.மேற்குப் பிரதேச செயலருமான சி.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் தனிநபர் - குழுப் போட்டி என இரண்டு பிரிவுக ளாக நடைபெறவிருக்கின்றது.

கர்நாடக இசை, சாஸ்திரிய நட னம, வயலின், வீணை, புல்லாங் குழல், மிருதங்கம ஆகிய போடடிகள் தனிநபர் போடடிகளாகவும் - கிரா மிய நடனம், கிராமிய இசை போன் றவை குழுக்களுக்கிடையேயான போட்டிகளாகவும் நடத்தப்படவுள் ளன.

இதேவேளை, இலக்கியம் காட் டும் இயற்கை வளம், யாழ்ப்பாண இலக்கிய வளர்ச்சியின போக்கு, ஒழுக்கம் விழுப்பம் தரும் போன்ற தலைப்புக்களை மையப்படுத்துவ தான பேச்சுப் போடடிகளும் இடம பெறவுள்ளன.

வலி.மேற்குப் பிரதேசத்திற்குட் பட்ட 15-20 வரையான வயதையு டைய இருபாலாரும் போட்டிகளில் பங்குபற்றலாம். வெற்றி பெறுபவர்க ளுக்கு தகுந்த பரிசில்களும் உண்டு. போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விணணப்பப்படிவங்களை வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக கொள்ள முடியும் என்றும் அறி விககப்பட்டுளளது. (அ-49)

# பாதிக்கப்பட்ட நகரம் புனரமைப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தம் காரணமாக பெரிதும் பாதிக் கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, காத்தான்குடி ஆகிய நகரங்கள் ஐக்கிய நாடுகள் சபை வாழவிடத் திட்டமான யு.என்.ஹபி டாட் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட இந்நகரங்க ளிற்கு தலா 10 சமூக அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்பட்டு ஒவ் வொரு சபைக்கும் தலா 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதிகள், விளையாட்டு மைதானம, மின்சாரம், குடிநீர் உட்பட்ட அபி விருத்திப் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக யு.என்.ஹபிடாட் நிறு வன திட்டப் பணிப்பாளர் கபில பொ னாண்டோ தெரிவித்துள்ளார். (து-7)

# வடக்கு கிழக்குக்கு நிரந்தர அதிபர் நியமனங்கள் மத்திய கல்வி அமைச்சின் அனுமதிக்குக் காத்திருப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா கல்வி வலயத்தில் 38 பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெறறிடங்கள் நிலவுவதாக வலயக் கல்வப் பணிப்பாளர் யு.எல்.எம். ஜேனுதின் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலைகளில் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசி ரியர்கள் கடமை நிறைவேறறு அதி பர்களாகப் பணிபுரிந்து வருவதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்குடா கல்வி வலயத்திலுள்ள 96 பாடசாலைகளில் 58 பாடசாலைக ளில் மட்டுமே நிரந்தர அதிபர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

ஏனைய பாடசாலைகளுக கு நிரநதர அதிபர்கள் நியமிக்கப்படா ததன் காரணமாக கல்வி முகா மைத்துவ ரீதியாக பல்வேறு சிக் கல்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நிரந்தர அதிபர்களுக்கான வெற்றி டங்கள் ,நிலவுவதால் ஆசிரியர்கள பதில் அதிபர்களாக கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு கடமை நிறைவேற்று அதிபர்களாக பணிபுரிந்து வரும் ஆசிரியர்களின் விபரங்களை வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சு அண்மையில் திரட்டியுள்ள போதிலும மத்திய கல்வியமைச்சின் அனுமதி இதுவரை கிடைக்காததன் காரண மாக நிரந்தர அதிபர் நியமனங்களை வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள ளது. (அ-2)

# பயிற்சி நெறி ஒத்திவைப்பு

யாழப்பாணம் பிராந்திய பயிற்சி நிலையத்தில் ஆகஸ்ட் மாதம் முத லாம் திகதி நடைபெறவிருந்த மருந்து கலவையாளர் பயிற்சி நெறி தவிர் க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், பயிற்சி நடைபெறும் திகதி பற்றிப் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ் வரன் அறிவித்துள்ளார். (து)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு



அவர் 'கண்டகி நதி 300 மைல் தொலைவில் இருக்கின்றது. வழி கடினமானது. உங்களால் போக முடியாது. உங்களுக்கு சாலக் கிராமம் தானே வேண்டும்? நான் தருகிறேன்' என்று 5 சாலக் கிராமங்களை அளித்தார். 'இன்னும் என்ன வேண்டும்' என்று கேட்டார். 'உருத்திராச்ச மணிகள் வேண்டும்' என்று கேட்டேன். அவர் தன் சீடனைப் பார்த்து உருத்திராச்ச மணிகளைக் கொண்டு வந்து கொடு என்று கட்டளையிட்டார். அவன் ஒரு சிறு கூடையில் உருத்திராச்ச மணிகளைக் கொண்டு வந்து கொடுத்தான். சுவாமிகள் அவனைப் பார்த்து உனக்கு காத்திரம் அறிந்து கொடுக்கத் தெரியவில்லையே! நிறையக் கொடு என்று கூறினார். அவன் ஒரு குட்டிச் சாக்கு நிறையக் கொண்டு வந்து கொடுத்தான்.

சுவாமிகளுடைய கழுத்தில் வெள்ளிக்குமிழ் அணிந்து கொண்டிருந்தார். அவர் வீர சைவரோ என்று நினைத்தேன்.

'சுவாமி! தங்கள் மார்பில் அணிந்திருப்பது சிவலிங்கமா' என்று கேட்டேன். அவர் புன்னகை செய்து அந்த வெள்ளிக் குமிழைத் திறநதார். அதற்குள் தங்கக் குமிழ் இருந்தது. அதைத் திறந்து சுண்டக்காய் அளவு வெண்மையான தந்த மணியைப் போன்ற ஒரு மணியை எடுத்து என்கையில் கொடுத்தார். 'இது என்ன தெரியுமா?' என்று கேட்டார். நான் 'சொன்னால் தெரியும்' என்று சொன்னேன். அவர் உரக்கச் சிரித்தார். நீ சமத்தன் தெரியாது என்பதற்குப் பதிலாக சொன்னால் தெரியும் என்றனயே! உயர்ந்த ஜாதி நாகம் ஒருவரையும் கடிக்காமல் நீண்டகாலம் வாழ்ந்தால் அதனுடைய நஞ்சு திரண்டு நாகமாணிக்கமாக ஆகும். அது போல் சிவஜோதிகளுக்கு யோகசக்தியினால் விந்து நழுவாமல் ஊர்த்துவரேதஸாக மேலே சென்று நின்று விளங்கினால் அந்த விந்து சிரோன்மணியாக மாறிவிடுகிறது. இந்த இடத்தில் ஒரு மகான் தவம் செய்து கொண்டிருந்தார். முடிவில் அவருடைய சிரஸ் வெடித்து இந்த மணி வெளிப்பட்டு வந்தது. அப்படி வந்த மணிதான் இது. இதற்கு 'சிரோன்மணி என்று பெயர்'

இதற்கு ஒரு பரீக்ஷை உண்டு. கால்மாட்டிலே வைத்துப் படுத்துக் கொண்டால் அதுவே தலைமாட்டிற்கு வந்துவிடும். நேபாள ராஜா இதனை ஒருவாரம் வைத்துப் பரீக்ஷை செய்தார். இது மிகவும் அபர்வமானது என்று கூறினார். மறுபடியும் அந்த மணியைத் தங்கக் குமிழியில் வைத்து அணிந்துகொண்டார். இதைக்கேட்டு நான் வியந்து நின்றேன். அதனைப் பார்க்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்ததே என்று மகிழ்ச்சியடைந்தேன்.

## ஸ்ரீசைல யாத்திரை

ஸ்ரீசைலம் என்பது திருப்பருப்பதம் என்று தேவாரத்தில் பேசப்பெறுகிறது. திருநந்தி தேவர் அவதரித்த திருத்தலம் 12 ஜோதிலிங்கத்தில் ஒன்று. சுவாமியின் பெயர் மல்லிகார்ஜீனர். அம்பிகையின பெயர் ப்ரமராம்பிகை அற்ஜுனம் - மருதமரம். மல்லிகாஜீனம் என்ற சொல்லுக்கு மல்லிகைக் கொடி படர்ந்த மருதமரம் என்பது பொருள். அங்கு கிருஷ்ண நதி ஓடுகின்றது. வீர சைவர்கள் பூசை வீர சைவர்களாகிய எங்களுக்கு மிகவும் உரிமையுடையது.

என்னுடைய தந்தையார் 40 மைல் நடந்து போய் வழிபாடு செய்தார். அத்தலத்தைத் தரிசிக்க வேண்டும் என்று விரும்பினேன். கோவைநாட்டுக் கோட்டை நகர தனவணிகர் திரு. நடராஜன் செட்டியாரும் மற்றும் சில அன்பர்களும் என்னுடன் யாத்திரைக்கு வந்தார்கள். மனலயடி வாரத்தில் இருந்து 25 மைல் மாட்டுவண்டியில் சிரமப்பட்டுச் சென்றோம். பெற்றசெரு என்ற இடத்தில் தங்கினோம். அங்கிருந்து 13 மைல் நடந்து கோயிலைச் சேர்ந்தேன். யாத்திரிகர்கள் நடந்து சென்று கால் அலம்பாமல் கால் தூசியுடன் சிவலிங்கத்தைத் தழுவி வழிபடுவதற்கு ஒரு ரூபா கட்டணம். அதற்குத் தூளி தரிசனம் என்று பெயர்.

கோயிலுக்குப் போகு முன் வழியில் ஒரு மண்டபத்தில் இருந்து கோயிலின் சிகரத்தைத் தரிசிக்க வேண்டும்.

ஸ்ரீ சைலம் சிகரம் த்ருஸ்ட்வா
புனர் ஜென்மம் நவித்யதே!

ஸ்ரீ சைலத்தின் சிகரத்தைப் பார்த்தவருக்கு மறு ஜென்மம் இல்லையென்று சிவகாமம் கூறுகின்றது. நாங்கள் சென்றது மகாசிவராத்திரியன்று. அப்பொழுது அங்கே கோயிலைத் தவிர வேறு தங்குமிடம் இல்லை. நாங்கள் கோயில் அதிகாரியைக் கண்டு ஒரு இடம் தருமாறு கேட்டோம். 'அவர் எங்களை இருங்கள்' என்று சொல்லி 3 மணி நேரம் காக்க வைத்தார். பின்னர் கோயிலுக்கு மேற்கே மூங்கில்களை நட்டு மஞ்சம் புல்வேய்ந்து இருபர்ன சாலைகள் அமைத்துக் கொடுத்தார். நாங்கள் அதில் தங்கினோம். இரவு முழுவதும் டமாரத்தை அடித்துக் கொண்டிருந்தார்கள். 'ஏனையா இப்படித் தூங்கவிடாமல் டமாரத்தைத் தட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டேன். 'இதனைத் தட்டவில்லையானால் புலி வந்துவிடும்' என்றார்கள்.

மகாசிவராத்திரி அன்று கிருஷ்ண நதியில் நீராடினோம். அங்கு அது பாதாள கங்கை என்று வழங்கப்படுகிறது. நெடுந்தூரம் இறங்கி ஏறவேண்டும். அங்கிருந்து தீர்த்தம் கொண்டு வந்து நாங்களே எங்கள் கையால் இறைவனுக்கு அபிஷேகம் செய்து வழிபாடு செய்தோம்.

மறுநாள் பாரணம் செய்துவிட்டுப் புறப்பட்டோம். 13 மைல் நடந்து வந்து பெத்தசெரு சேர்ந்தோம். முதல் நாள் உபவாசமானதனால் களைப்பும், கால்வலியும் மிகுந்தன. அங்கு ஒரு மண்டபத்தில் தங்கினோம். பசியும், தாகமும் மிகுந்திருந்தன. என்னுடன் வந்த ஒரு ரெட்டியார் அன்பரைப் பார்த்து 'அனுஷ்டானம் செய்ய ஒரு செம்பு தண்ணீர் கொண்டு வாரும்' என்றேன். அவர் போய் அனுஷ்டானம் செய்துவிட்டு தண்ணீர் கொண்டு வந்தார். நான் அனுஷ்டானம் செய்து கொண்டேன். அந்த மலைக் காட்டில் ஒரு குழுவினர்கள் அன்னதானம் செய்துகொண்டிருந்தார்கள். உடன் வந்தவர்கள் அங்கு போய் உணவு செய்துவிட்டு எனக்கும் உணவு கொண்டு வந்தார்கள். புளியங்காய்த் தொக்கு ஆந்திராவில் வெகுசுவையாகச் செய்வார்கள். உணவுடன் அந்தத் தொக்கையும் உண்டு இளைப்பாறினேன்.

பின்னர் மகாநந்தி என்ற தலத்தை அடைந்தோம். அங்கு நந்தி வாயில் தீர்த்தம் வந்து விழுந்து கொண்டிருக்கிறது. பெரியகுளம் பளிங்கு போல் தெளிந்த நீர். இடுப்பளவு ஆழம். அதில் நீராடியவுடன் எங்கள் களைப்பெல்லாம் தீர்ந்துவிட்டது.

அங்கிருந்து ஓங்காரம் என்ற தலத்திற்குச் சென்றோம். (உஜ்ஜாயினிக்கருகில் நர்மதாநதி தீரத்தில உள்ள ஓங்காரம் வேறு) இந்த ஓங்காரம் என்ற தலம் விலங்குகள் வாழ்கின்ற பெரிய வனத்திற்கு நடுவே விளங்குகிறது. அங்குள்ள புனித தீர்த்தத்தில் முழுகி ஓங்கார நாதரைத் தரிசனம் செய்தோம்.

## கோகர்ண யாத்திரை

கோகர்ணம் என்பது பூ கைலாசம் மேல் கடல் அருகில் இருக்கின்ற திருத்தலம்.

'கால்களால் பயன் என் கறைகண்டன் உறை கோயில்
கோல கோபுர கோகரணம் சூழ
கால்களால் பயன் என்'

என்பது அப்பர் திருவாக்கு.

இராவணன் கைலாசத்தில் சிவபெருமானிடம் கொட்டைப்பாக்கு அளவுள்ள ஆத்ம லிங்கத்தை வாங்கிக் கொண்டு வந்தான். இந்த சிவலிங்கத்தை இலங்கைக்குப் போக விடாமல் தடைசெய்யும் பொருட்டுத் தேவர்கள் இராவணனுக்குச் சிறுநீர் பெருகச் செய்தார்கள். (தொடரும்)

# க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(பொன்னாலை)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவில் கணிதம் மற்றும் விஞ்ஞானத்துறைப்பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வினாத்தாள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றினை தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தவுள்ளது.

யாழ.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவிருககும் இக் கலந்துரையாடல் நாளை மறுதினம் பௌதீகவியல் வினாததாள் சம்பந்தமாகவும் எதிர்வரும 6,7 ஆம் திகதிகளில் முறையே உயிரியல் - இணைந்த கணித பாடங்களுக்கும் இரசாயனவியல பாடத்திற்குமான வினாத்தாள்கள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது

மேற்குறித்த திகதிகளில் காலை 8:30 மணிக்கு கலந்துரையாடல் ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரு-49)

# வடக்கு - கிழக்கு பாடசாலைகளுக்கு திட்டமிடல், நிதி உதவியாளர் நியமனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் திட்டமிடல் உதவியாளர்களாகவும், நிதி உதவியாளர்களாகவும் 727 பேர் நியமிக்கப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண கல்விப பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்போது இம் மாகாணத்திலுள்ள பாடசாலைகளிலும், திணைக்களங்களிலும பயிற்சிப் பட்டதாரிகளாகக் கடமையாற்றுவோரிடையே நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில 629 பேர் தமிழ்மொழி மூல பாடசாலைகளுககும் 98 பேர் சிங்களமொழி மூலப் பாடசாலைகளுக்கும் இந்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இம் மாகாணத்திலுள்ள தேசிய பாடசாலைகளில் மத்திய கல்வி அமைச்சினால் ஏற்கனவே திட்டமிடல் உதவியாளர்களாகவும், நிதி உதவியாளர்களாகவும் 72 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (அ-7)


# தொழிலாளி வெட்டிக் கொலை

(கொழும்பு)

களுத்துறை மத்துகம சி.வி.சி. செலோன் தோட்டத் தொழிலாளி ஒருவர் நேற்றுமுன்தினம் வெட்டிக கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி மத்துகம பாஞ்சித் தோட்டத்தில் குழுமோதலில் ஒருவர் வெட்டப்பட்டும் பல தொழிலாளிகள் காயமடைந்தும இருந்தனர். இந்த இன முறுகலின தொடர்ச்சியே இக் கொலையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-7)







ஸ்ரீகல்கி தெய்வீக அனுபவ தீட்சை அண்மையில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்திய ஏகத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீராஜேஷ பகவத் தாஜாஜி தீட்சை மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதை முதல் படத்திலும், தீட்சை நடத்துவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொணடோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# ஒன்றுகூடலும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் ஒன்றுகூடலும் சான்றிதழ் வழங்கும் வைப்வமும் நாளை மறுதினம் ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத் தலைவர் டி.எம்.வேதாபரணம் தலைமை தாங்குவார்.

இந்நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, யாழ்ப்பாணம் பாடசாலை சங்கத் தலைவர் இராசதுரை, யாழ்.பாடசாலை கிரிக்கெட் சங்கத் தலைவர் பொ.கமலநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளார்கள். (து-19)

# துப்புரவு செய்யப்படும் நீதிமன்ற வளாகம்

சாவகச்சேரி நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தைப் பாரிய இயந்திரத்தின் உதவியுடன் துப்புரவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு யுத்தத்தின் பின் துப்புரவு செய்யப்படாது பெரும் பற்றைக்காடாகவும் விஷ ஜந்துக்கள் குடியிருப்பாகவும் இருந்த இவ்வளாகம் திருத்தப்படுவதால் நகரவாசிகள மகிழ்ச்சியுடைந்துள்ளனர். (து-29)

# மறவன்புலோ வடக்கில் நெற் செய்கைக்கு அனுமதி

மறவன்புலோ வடக்குப் பகுதியில் கடந்த வருடம் விவசாயச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட வயல்களுக்குச் செல்வது இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து விவசாய சம்மேளனத்தின் முயற்சியைத் தொடர்ந்து இவ்வாரம் முதல் அப்பகுதி விவசாயிகள் தமது வயல் நிலங்களுக்குச் சென்று காலபோக நெற்செய்கைக்கு வேண்டிய பண்படுத்தல் மற்றும் ஆயத்த வேலைகளில் ஈடுபடலாம் என்றும் அதற்கான அனுமதியை இராணுவம் வழங்கியுளளதாகவும் மறவன்புலோ விவசாய் சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர். (து-29)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(கோப்பாய்)

உரும்பிராய் புனித மிக்கேல் சனசமூக நிலைய முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு முன்பள்ளி ஆசிரியர் றொ.றொனி தலைமையில் நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் ஜே.பியும, சிறப்பு விருந்தினர்களாக உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பங்குத்தந்தை அருட்திரு செ.ஜெபநேசரத்தினம், யாழ்.பிரதான தபாலக தபாலதிபர், உரும்பிராய் கிளை S.L.R.C.S. தலைவர் ஆதர்மஜா, கோப்பாய் அரசியல்துறைப் பொறுப்பாளர் து.செம்பருத்தி, கோப்பாய் பிராந்திய முன்பள்ளி இணைப்பாளர் ப.மகிழினி, யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுக்கழக அன்சலீன் குருசுமுத்து, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை அதிபர் மு.விக்கினேஸ்வரன் மற்றும் உரும்பிராய் கிழக்கு ஜே.266 கிராமசேவையாளர் செ.விக்கினேஸ்வரன், யாழ்ப்பாண சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் நவநீதம் ஜெகதீசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-7)

# மஹோற்சவம்

புத்தூர் சிவன் கோவிலம்மை கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ந-2)

# ‘தடைகளை உடைத்து விடுதலை காண்போம்’

## நல்லூர் அரசியல் பொறுப்பாளர் செழியன்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் தொடர்ந்து ஏமாற்றிக்கொண்டே வருகிறது. போராளிகளைக் கொலை செய்தும், மக்களைக் கடத்தியும், நிவாரணத்தைச் சூறையாடியும் பல வழிகளில் தமிழ் மக்களை இம்சைப்படுத்தி வருகிறது. இக் கொடுமைகளைப் பொறுக்கமுடியாத தமிழ் மக்கள் பொறுத்ததுபோதும் போரை உடனடியாக ஆரம்பித்து எம்மினத்துக்கு விடுதலை தேடித் தாருங்கள் என மக்கள் எமது தலைவரைக் கேட்கும் நிலையில் உள்ளனர்.

நல்லூர் பிரதேச அரசியல் பொறுப்பாளர் செழியன் அண்மையில் யாழ.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற யாழ்.ரெகசின் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இன்று தமிழ் மக்கள சுயநிர்ணய உரிமை, சுதந்திரம், கல்வி வாய்ப்புக்கள் இன்றி அல்லற்பட்டு கொண்டிருக்கின்றார்கள். அரசினால் தடைகள் பல ஏற்படுத்தப்பட்டாலும் அவற்றை உடைத தெறிந்து எமக்கான அரசை அமைக்கும் நேரம நெருங்கி வருகிறது எனத் தெரிவித்தார். (து-122)

# தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுகோள்

(கொழும்பு)

சமுர்த்தி அமைச்சில் இன்னும் தீர்க்கப்படாதிருக்கும் பிரச்சினைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள சங்கம் கோரியுள்ளது.

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தொழில் பாதுகாப்பு, பதவி உயர்வு முறையினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியின் நன்மைகளை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளைச் சங்கம் மேற்கொள்ளவுள்ளதென சங்கத்தின் செயலாளர் ஜெகக்குமார- நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சமுர்த்தி உதவிகளை அதிகரிப்பது சமபந்தமாகவும் இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (து-7)

# ஈழ அகதிகள் 27 பேர் தாயகம் திரும்பினர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட உள்நாட்டு பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்து தமிழகம் சென்ற ஈழ அகதிகள் 27 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நாடு திரும்பினர்.

தத்தமது சொந்த இடங்களிலிருந்து 1990 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற சிறுவர்கள் உட்பட 27 பேரே தற்போது நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை சர்வதேச அகதிகளுக்கான அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது.

தமிழகம் அத்தியடி பிள்ளையார் கோவில் அகதி முகாமில் இவர்கள் வாழ்ந்து வந்தனர். இலங்கையில் ஏற்பட்ட தற்காலிக சமாதான சூழ்நிலையை அடுத்தே தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரும் திட்டத்துடன் இவர்கள் நாடு திரும்பியதாகத் தெரிவித்தனர். (ந-8)

# கணனி அறிவைப் பெருக்குமாறு பிரதமர் அறிவுறுத்தல்

(கொழும்பு)

அபிவிருத்தி அடைந்துவரும் உலகத்துடன் இணைந்து செல்வதற்கு சிறுவர்களின தகவல் தொழில்நுட்ப அறிவு மேம்படுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் தொழில்நுட்பத் திறன் உயரிய நிலையில் இருக்கின்றபோதிலும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக மக்கள் மத்தியில் குறைந்த அளவிலான அறிவே காணப்படுகிறது எனப் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் புத்தளம் கன்னமூலை முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் பொன் விழா வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

உலகத்துடன் இணைந்து செல்லக்கூடிய வகையில் இலங்கைச் சிறார்களுக்குக் கல்வியை ஊட்டவேண்டும் என்று குறிப்பிட்ட அவர், இலங்கையர்களில் 90 வீதமானவர்கள் எழுத, வாசிக்கக் கூடியவர்கள் என்றும் கூறியுள்ளார்.

10 வீதத்தினரே உரிய அறிவு பெறாமல் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய பிரதமர், கணனி அறிவை 10 வீதத்தினரே பெற்றுக் கொண்டுள்ளதாகவும் மிக விரைவில் 50 வீதமானோர் மத்தியில் கணனி அறிவைக் கொண்டுசெல்ல வேண்டும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (து-2)

# கூட்டுறவு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கூட்டுறவு மாநாடு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-2)

# மழைநீர் சேகரிப்பு தாங்கிகள் அமைப்பு

(துன்னாலை)

இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையத்தினால நகர்ப்புற பொது வசதிகள் அமைச்சின் நகர்ப்புறக் குடியிருப்புக்களை விருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் அனுசரணையின் கீழ் வடமராட்சியில் இரண்டு மழைநீர் சேகரிப்பு தாங்கிகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

அவற்றில் ஒன்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் மற்றது கரவெட்டி ரலன்ற் முன்பள்ளி நிலையத்திலும் அமைக்கப்பட்டு வருகிறது.

இதன்மூலம் மழைநீர் சேகரித்து சுத்தஞ் செய்யப்பட்டு குடிநீராக மாற்றப்பட்டு பயன்படுத்தப்படவுள்ளது. (து-101)

# நூல் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

(துன்னாலை)

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பெற்றோர் உதவியுடன் உருவாக்கப்பட்ட நூல் நிலையத்துக்கான நூல்கள் கொளவனவுக்கென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் 70 ஆயிரம் ரூபாவினை பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

இந்நிதி மூலம் ஆரம்பக்கல்வி பிள்ளைகளுக்கான அறிவுசார் நூல்கள் முதலியன கொள்வனவு செய்யப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் இ.ராகவன் தெரிவித்தார். (து-101)

# மஹோற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-79)

# தூவல் நீர்ப்பாசன பொறி

(இணுவில்)

உடுவில் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு மானிய அடிப படையில் வழங்கப்பட்ட தூவல் நீர்ப்பாசன பொறிக்கான பணத்தை ரூபா ஆயிரம் தவணைப் பணமாக ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதிக்கு முன்னதாகச் செலுத்துமாறு உடுவில் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் சு.சோதிநாதன் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுள்ளார். (அ-122)

# கணனி நிறுவனம் திறப்பு

(இணுவில்)

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் யாழ்.ரெகசிஸ் என்னும் கணனிக் கல்விக் கல்லூரி ஒன்று கடந்த 21ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்நிறுவனத்தினரால் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மல்ரி மீடியா என்ற பாடக் கருத்தரங்கும் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

அத்துடன் கணனி பாடம் சம்பந்தமான தமிழ் சீடிக்களும் வெளியிடப்பட்டன.

இந்நிகழ்வில் வணிக முகாமைத்துறை பீடாதிபதி க.தேவராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டார். (ந-122)




தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரின் 40ஆவது நினைவு தின விழாவின் போது புலோலிச் சந்தியிலுள்ள தமிழ்த் தாத்தாவின் திருவுருவச் சிலைக்கு புலோலி தொழிலதிபர் எஸ்.சின்னையா (ஹொண்டா இராசா) மலர்மாலையணிவிப்பதையும், டாக்டர் எஸ்.திருச்செல்வநாயகம், யாழ்.மாவட்ட செயலக உதவி அரச அதிபர் வி.வீரபத்திரபிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினரான பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதி உரையாற்றுவதையும், விழாவுக்கு தலைமை தாங்கிய ஏ.என்.எஸ்.திருச்செல்வம், வரவேற்புரை நிகழ்த்திய எஸ்.கதிர்காமத்தம்பி உட்பட விழாவில் கலந்து கொண்ட சிலரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பரு.நிருபர்)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 17

பி.ஜே.ராஜய்யா

## அடி மேல் அடி!

கல்லறைக்குள் படுத்திருப்பது போலிருந்தது சதாமுக்கு...

மெலிதாய் இருள் பரவிய தனியறையில் முகட்டை பார்த்து தரையில் மல்லாக்கப்படுத்திருந்தார்.

மூன்று பக்கமும் கை நீட்டினால் இடிக்கும் தூரத்தில் நெருக்கமாய் சுவர்கள். படுத்தபடியே சற்று உந்தி கீழே இறங்கினால் தட்டும் தொலைவில் ஸ்ட்ராங்கான இரும்புக் கம்பிக்கதவு நாலாவது பக்கத்தில்.

இந்த முகட்டையும் கம்பிக் கதவையும் கனத்த சுவர்களையும் மட்டுமே கடந்த ஒரு வருடமாய் பார்த்துக்கொண்டிருக்கிறார் சதாம். மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளையும் பயங்கரவாதிகளையும் அடைத்து வைப்பதற் கென்று விசேஷமாய் கட்டப்பட்ட



அந்த கொட்டடி சிறையறை யில் துடிப்பு மிக்க சதாம் ஊனமுற்றவர்போல் முடக்கி வைக் கப்பட்டிருக்கிறார்.

சதாம் பெருமூச்செறிந்தார்.

இரும்புக் கதவின் பூட்டு திறக்கப்படும் சத்தம் கேட்டது. தலையை உயர்த்திப் பார்த்தார். கதவைத் திறந்து வார்டன் உள்ளே வந்தான். "தூங்குறீயா? ம்... வெளியே பம்பரமா அரசியல் பண்ணிக்கிட்டிருக்க வேண்டிய ஆளு இப்படி உள்ளே மடங்கிக் கிடக்கிறே...ம்... எல்லாம் விதி?" என்று முணுமுணுத்துக்கொண்டே வார்டன் சாப்பாட்டுத்தட்டை உள்ளே வைத்துவிட்டு மீண்டும் கதவைப் பூட்டிச் சென்றான். சதாமுக்கு சாப்பிட மனமில்லை.

அவர் சிறைக்குள் தள்ளப்படுவதற்கு முன் நடந்த அதிர்ச்சியூட்டும் அரசியல் சம்பவங்கள் நெஞ்சில் நிழலாடின. நாசர் மாறியிருந்தார். சதாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு நாசர் மாறியிருந்தார்...

ஈராக்கில் கூட்டாக ஆட்சியைக் கைப்பற்றிய ஆரீஃ:பும் மறுமலர்ச்சிக் கட்சியினரும், ஈராக்கை எகிப்துடன் இணைத்து புதிய அரபு தேசம் ஒன்றை உருவாக்க நாசருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால் 1961இல் எகிப்தும், சிரியாவும் பிரிந்ததிலிருந்து மனமொடிந்திருந்த நாசர் இத்தகைய இணைப்பு முயற்சிகளை ஆதரிக்காததோடு கேலி பேசவும் தொடங்கியிருந்தார். சதாமின் மனசில் விழுந்த முதல் அடி இது.



ஸ்டாலின்

இந்தச் சமயத்தில் சதாம் கண்போல் நினைத்திருந்த மறுமலர்ச்சிக் கட்சி இரண்டாக உடைந்தது. இது சதாமுக்கு விழுந்த இரண்டாவது அடி.

கட்சி உடைந்ததால் ஏற்பட்ட குழப்ப நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்டுத்திக்கொண்ட ஆரீஃ:ப், 1963 நவம்பர் 18-ஆம் திகதி திடீரென மறுமலர்ச்சிக் கட்சியின் முக்கிய தலைவர்களை இராணுவத்தின் துணையுடன் கைது செய்து சிறையிலடைத்தார். இவ்விதம் தன் கட்சி ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டது. சதாமுக்கு விழுந்த மூன்றாவது அடி.

உடைந்து போன கட்சியில் அஃ:பிலாக் என்பவர் தலைமையிலான கோஷ்டியை சதாம் ஆதரித்தார். அவர் மட்டுமல்ல மாமா கைருல்லாவும் அவரது உறவினர்களும் கூட அஃ:பிலாக்கையே ஆதரித்தார்கள்.

இதுவரை இல்லாத தீவிரத்துடன் சதாம் அரசியல் பணிகளில் இறங்கினார். அரசாங்கத்தின் கண்ணில் படாமல் தலைமறைவாக இருந்துகொண்டு அஃ:பிலாக் தலைமையிலான மறுமலர்ச்சிக் கட்சியை ஆட்சியில் அமர்த்திப் பார்க்க வேண்டும் என்ற வெறியுடன் முழுமூச்சாக அரசியல் வேலைகளை செய்து வந்தார்.

கணக்கு எங்கோ பிசகிவிட்டது...

தலைமறைவாக இருந்த சதாம் எதிர்பாராத விதமாக போலீசில் சிக்கினார். போலீஸ் அவரைப் பிடித்து தனிமைச் சிறையில் அடைத்ததோடு அவர் செய்த-செய்யாத சகல அரசியல் கொலைகளையும் அவர் தலையில் போட்டுவிட்டது. இது சதாமுக்கு விழுந்த நான்காவது அடி...!

சதாம் புரண்டு படுத்தார்...

அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களுக்குக் கண்டிப்பாக மரண தண்டனை தான் கிடைக்கும். அல்லது வாழ்நாள் முழுவதும் ஆயுள் கைதியாக இதே இருட்டறையில் கிடந்து சாக வேண்டும்.

இது பற்றி சதாம் துளியும் கவலைப்படவில்லை.

சிரமப்பட்டு ஆட்சியைப் பிடித்த கட்சி இப்படி அற்ப ஆயுளில் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு விட்டதே. எங்கே தவறு நடந்தது? அதை சரிப்படுத்த என்ன செய்ய வேண்டும்? என்ற கவலை தான் பெரிய கேள்விக்குறியாய் அவர் மூளையைக் குடைந்து குழப்பிக் கொண்டிருந்தது.

எழுந்து உட்கார்ந்தார். பிறகு எழுந்து நின்றார். குறுக்கும் நெடுக்கும் நடந்தார். தீவிரமாய் அரசயலைச் சிந்திக்கச் சிந்திக்க விடலைப் பருவத்திலிருந்து அவரோடு தொடர்ந்து வந்து கொண்டு இருந்த துடுக்குத்தனம் கொஞ்சம் கொஞ்சமாக விலகி மறைந்தது.

சோவியத் அதிபர் ஸ்டாலின் எழுதிய புத்தகங்கள் அவருக்கு சிறைக்குள் ரகசியமாகக் கிடைத்தன. படித்தார். ஸ்டாலினின் கம்யூனிசப்பிடிப்பு அவருக்குப் பிடிக்கவில்லை. என்றாலும், ஸ்டாலின் தன் கட்சியையும் நாட்டு மக்களையும் தனது இரும்புப் பிடிக்குள் வைத்திருந்தது பிடித்தது.

தனது கேள்விக்கும் குழப்பத்துக்கும் ஸ்டாலினிசத்துக்குள் விடை இருப்பதாக சதாம் கருதினார்...

ஆட்சி அதிகாரத்தை பிடிக்கவும், அதை காப்பாற்றி வச்சுக்கவும் கட்சிக்குள் ஒற்றுமை இருக்கணும், இந்த ஒற்றுமைக்கு பங்கம் வர்ற மாதிரி இருந்தா பூசல் வெடிச்சா தயவு தாட்சண்யம் பாக்காம உடனே களையெடுப்பு செஞ்சிருக்கணும். தேவைப்பட்டா அந்த துரோகிகளின் ரத்தத்தை எடுத்தாவது கட்சிக்குள் ஒற்றுமையை நிலை நாட்டியிருக்கணும். இதைச் செய்யாமல் விட்டது தப்பு. அந்த தப்பு எதிர்காலத்துல திரும்ப நடக்கவிடக்கூடாது. தகுந்த ஏற்பாடு செய்யணும். கட்சிக்குள் யார் துரோகிங்கிறதை கண்டுபிடிக்க புதுசா ஒரு கண்காணிப்புப் படை அமைக்கணும்...

இந்த ஞானம் வந்தவுடன் சதாமின் உடம்புக்குள் புதிய உற்சாகம் பீறிட்டுப்பாய்ந்தது. துள்ளிக் குதித்தார். உடனே ஏதாவது செய்ய வேண்டும் என்று பரபரத்தார்... இனி சிறைக்குள் முடங்கிக் கிடப்பது இயலாத காரியம் என்று உணர்ந்தார்.

தன்னை பார்க்க வரும் கட்சிக்காரர்களை சந்தித்து பேசுவதற்கும் இன்ன பிற காரியங்களுக்கும் சிறை விதிகளை மீறி அவ்வப்போது சலுகையளித்து தனக்கு சாதகமாக நடந்து கொள்ளும் சிறை வார்டர்களை கைக்குள் போட்டுக்கொண்டார்.

சிறையதிகாரிகளின் கண்களில் சாமர்த்தியமாய் மண்ணைத் தூவி தப்பியோட திட்டம் வகுத்தார்...

(தொடரும்)

## கல்கமுவ வாவியில் தோட்டாக்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கலகமுக கொப்ராகமுவ வாவியில் தோட்டாக்கள் இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அந்த வாவியில் சோதனை நடத்தப்பட்ட போது கண்டுபிடிக்கப்பட்ட அலுமினியப் பெட்டி ஒன்றில் இருந்து ரி 56 ரக தோட்டாக்கள் 253 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவ முகாமில் இருந்து இந்த தோட்டாக்கள் திருடப்பட்டு இங்கு கொண்டுவந்து போடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந் நிலையில் கலேவெல தேவகீவ நீர்த்தேக்கத்தில் இருந்தும் 3 குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த நீர்த்தேக்கத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்களுக்குக் கிடைத்த பொலத்தீன் பை ஒன்றில் இம் 3 குண்டுகளும் இருந்துள்ளன. கிறிஸ்தடவப்பட்டு அப்பொலத்தின் பையினுள் அக்குண்டுகள் போடப்பட்டிருந்தன. குண்டுகளைக் கைப்பற்றிய பொலிஸார் அவற்றை செயலிழக்கச் செய்தனர். (து)

## சுற்றுலாத்துறை மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளின் சுற்றுலாத்துறை அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாடு இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சு, சார்க் வர்த்தக கைத்தொழில் சபையுடன் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இம்மாநாடு "தெற்காசியாவுக்கு சுற்றுலா மேற்கொள்ளுங்கள்" என்னும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ளது. இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டார நாயக்க இதனை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சார்க் நாடுகளின் சுற்றுலாத்துறைப் பிரதிநிதிகள் நுற்றுலாத்துறை பயண முகவர்கள் உள்ளிட்ட இத்துறையில் சம்பந்தப்பட்டுள்ள அனேகமானோர்இம் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் ஏனைய நாடுகளிலிருந்து தெற்காசிய நாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதற்கும், தெற்காசிய நாடுகளிடையே சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கும் இம்மநாடு உறுதுணையாக அமையும் என சுற்றுலாத்துறை அமைச்சு கூறியுள்ளது. (ச)

## அடுத்த வருடமே ஜனாதிபதித்தேர்தல் அடித்துக் கூறுகிறார் அனுரா

(கொழும்பு)

யார் என்ன கூறினாலும் ஜனாதிபதித்தேர்தல் அடுத்த வருடமே நடாத்தப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடமே ஜனாதிபதித்தேர்தல் நடாத்தபடவேண்டும் என்பது அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதாக எகல்லிய கொடையில் சுற்றுலாத்துறை விடுதி ஒன்றினைத்திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரை ஜனாதிபதி பதவியினை வகிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அதிகாரம் இருக்கின்றது என அவர் தெரிவித்தார். (து-4)

## இலங்கை வங்கிக்கு அரையாண்டில் 1.3 பில்லியன் ரூபா இலாபம்!


(கொழும்பு)

இலங்கை வங்கி 1.3 பில்லியன் ரூபாவை இலாபமாக இந்த ஆண்டு முதல் ஆறு மாதங்களில் பெற்றுள்ளது.

இந்த ஆண்டு முடிவில் 3 பில்லியன் ரூபா இலாபம் பெற்றுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக வங்கியின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் 2005 ஆம் ஆண் டில் 200 பில்லியன் ரூபா வாடிக்கையாளர் வைப்பு நிதி மட்டத்தையும் விட கூடுதலான பணம் வைப்பில் இடப்பட்டிருப்பதாகவும் இந்த வங்கி மூலமே வதியாதார் வெளிநாட்டுக் கணக்கு மூலம் 60 சதவீதத்துக் கும் கூடுதலான வருவாய் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

இலங்கை வங்கியின் 66ஆவது வருடாந்த நிறைவைக் குறிக்கும் முகமாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ர-2)




பண்டிதர் வீ.பரந்தாமனின் வேர்-அடி வழித்தமிழ்ச் சொற்பிறப்பியற் சிற்றகரமுதலி (பண்டிதர் வேர்ச்சொல் அகராதி) நூல் பிரதியை பண்டிதர் வீ.பரந்தாமன் புலோலி பொது நூலகத்திற்கு நூலகர் ஏ.என்.எஸ்.திருச்செல்வத்திடம் கையளிக்கின்றார். (படம்: பரு. நிருபர்)

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

வலம்புரி

## சிவாஜியும் – சாவித்திரியும் போல ஜனாதிபதியும் – பிரதமரும்

தமிழத்திரைப்பட உலகில் நடிகர்திலகம் என்றால் அது சிவாஜிகணேசனையும் சாவித்திரியையுமே குறிக்கும். அந்தளவிற்கு அவர்களின் நடிப்பு திரை உலகில் பெரும் சாதனை படைத்துள்ளது.

எந்த பாத்திரத்தையும் அந்த பாத்திரத்தின் தன்மைக்கு அமைவாக ஏற்று நடிப்பதில் அவர்கள் இருவருமே ஈடு இணையற்றவர்கள் எனலாம்.

இது தமிழ்த்திரை உலகின் நடிகர்திலகங்கள் பற்றியது. மாறாக இலங்கையில் அரசியல் புலத்தில் நடிகர் திலகங்கள் என்றால் அது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையுமே குறிக்கும் என அடித்துக் கூறிவிடலாம்.

ஆம், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியில் அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படும் பொதுக் கட்டமைப்பு கைச்சாத்தானபோது அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டிய தேவையிருந்தது.

முக்கியமான ஓர் உடன்படிக்கை. அந்த உடன்படிக்கையால் அரசுக்கு ஆதரவு வழங்கிவந்த ஜே.வி.பி. தனது ஆதரவை விலக்கிக்கொண்டு வெளியேறிய சூழ்நிலை. இந்நிலையில் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக பல்வேறு எதிர்பார்ப்புக்கள் மக்கள் மத் தியில் நிலவியது. இச்சந்தர்ப்பத்தில் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையை பாராளுமன்றில் ஒப்புவிக்கும் பொறுப்பு நாட்டின் பிரதமர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷவுக்கே உண்டு.

ஆனால் பிரதமர் மகிந்த, பொதுக்கட்டமைப்பை பாராளுமன்றில் ஒப்புவிக்கும் பொறுப்பை தட்டிக் கழித்துவிட்டார். ஜனாதிபதி கேட்டுக்கொண்ட போதிலும் அதற்குப் பிரதமர் சம்மதம் தெரிவிக்கவில்லை. இதனால் இன்னொரு அமைச்சர் அந்த உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். பிரதமர் நாட்டில் இருக்கும்போது அவர் சமர்ப்பிக்கவேண்டிய உடன்படிக்கையை இன்னொரு அமைச்சர் சமர்ப்பிப்பதென்பது பொதுக் கட்டமைப்பை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே பொருளாகும்.

பொதுக் கட்டமைப்பை ஜே.வி.பி. எதிர்க்கின்றது என்ற காரணத்தினாலேயே பிரதமர் மகிந்தவும் அதனை எதிர்த்தார். அவரைப் பொறுத்தவரை ஜே.வி.பியை அரசுடன் சேர்த்துவைத்திருக்க வேண்டும் என்பது அவரின் நிலைப்பாடு.

பொதுக் கட்டமைப்பு சாத்திமற்றுப்போனாலும் ஜே.வி.பியின் உறவைக் கைவிடலாகாதென்ற பிரதமரின் நிலைப்பாட்டுக்குக் காரணமும் உண்டு. அதாவது, அடுத்த தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகத் தான் போட்டியிடும்போது அதற்கு ஜே.வி.பியின் ஆதரவு கிடைக்கும் என்பதே அந்தக் காரணமாகும். இது பிரதமரின் அரசியல் நடிப்பாக இருக்க, மறுபக்கத்தில் சுனாமி நிவாரணப் பணத்தை சொந்த வங்கிக் கணக்கில் வைப்புச் செய்த ஒருவரை எவ்வாறு இந்த நாட்டின் தலைவராக ஏற்றுக்கொள்ளமுடியும் என்று ஜனாதிபதி சந்திரிகா கண்டியில் நடந்த கூட்டமொன்றில் கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதியின் இந்தக் கேள்வி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைக் குறித்தே எழுப்பப்பட்டது என்பது நாட்டு மக்கள் அறிந்த உண்மை. இவ்வாறு கேள்வி எழுப்பிவிட்டு ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நேற்றைய கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்தமை சந்திரிகா குமாரதுங்கவின் உச்சமான நடிப்பு.

ஆக, இலங்கையின் அரசியலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் மிகச் சிறந்த நடிகர் திலகங்கள் என்பது உறுதியாகிவிட்டது.

# இராணுவத் தகவல்களை உடனுக்குடன் வெளியிடுவது நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும்

## தனியார் ஊடகங்களை ஜனாதிபதி சாடல்



(கொழும்பு)

இராணுவத் தகவல்களை உடனுக்குடன் வெளியிடுவது நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும் என தனியார் ஊடகங்களை ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பொலிஸ் படைத்தலைவர்களின் கூட்டத்தில உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத தொிவித்துள்ளார்.

சுனாமி அபிவிருத்தி பணிகள் தொடர்பாகவும் பொதுக் கடடமைப்பு உடன்படிக்கையை அமுல்படுத்த வேண்டிய தேவை பற்றியும் விளக்குவதற்காக மேற்படி நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

இநநிகழ்விற்கு வருகை தந்திருந்த தனியார் ஊடகங்களை வெளியேறுமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

75 சதவீதமான தனியார் ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவானவையாகவும் இராணுவ இரகசியங்களை வெளியில் கூறுபவையாகவும் உள்ளன.

நாட்டிற்கு சமாதானமே தேவை. முதலில் சுனாமி அபிவிருத்திப் பணிகள் சிறப்புற முன்னெடுக்கப்பட வேண்டும். சமாதான செயற்பாட்டை குழப்ப முயற்சிப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை கைச்சாத்திட முன்னர் பல தடவை இது விடயமாக விரிவான பேச்சுக்கள் நடாத்தப்பட்டன. இதனை அமுல்படுத்துவதற்கு ஆயுதப்படையினரின் ஒத்துழைப்புத் தேவை என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ந-6)

# தமிழருக்கான தீர்வில் சர்வதேசம் தலையிடாவிடின் போராட்டம் மூலம் உரிமையை வென்றெடுப்போம்

## மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை

(மன்னார்)

தமிழர்களின் உரிமையை சர்வதேச சமூகம் மீட்டுத் தர வேண்டும் அல்லது போரின் மூலம் அந்த உரிமைகளை நாமே வென்றெடுப்போம் என்று மன்னார் மாவட்ட மறை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

வவுனியா பிரகடன மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட உரிமை மறுப்பின் விளைவாக தங்களுடைய வாழ்வுக்காக ஆயுதப் போராட்டத்தை தவிர்க்க முடியாமலேயே தமிழர்கள் தெரிவு செய்தனர்.

இததகைய நிலையில் , அரசு தமிழ் மக்கள் மீது மிலேச்சததனமான போரை கட்டவிழ்த்துவிட்டது.

1999ஆம் ஆண்டு மடுத்திருப்பதியில் இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவில் தஞ்சம் புகுந்திருந்த போது இராணுவம் அதனை ஆக்கிரமித்தது.

மடுததிருப்பதி நிலைமையை ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் தெரிவித்து அதன் மீது படையெடுப்புச் செய்ய வேணடாம் என்று கேட்டுக்கொண்டோம். அவ்வாறு படையெடுப்பு செய்யமாட்டோம் என்று கடைசிவரை வாக்களித்துவிட்டு அதற்கு மாறாக படையெடுப்புச் செய்து மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

போராளிகள் ஆயுதங்களுடன் நின்றிருந்த போதும் மக்களைக் காப்பதற்காகப் படையினருக்கு எதிராகத் தாககுதல் எதுவும் நடத்தாமல் நகர்ந்தனர். ஆனால் சிங்கள படைகள் மக்களை கொன்றொழித்த காரணததால் அப் படைகளை போராளிகள் ஓட ஓட விரட்டியடித்தனா.

மூன்று ஆண்டுகளின் முன்னர் அதாவது 2002ஆம் ஆண்டு சர்வதேச சமூகத்தை நம்பியே இந்த அமைதி நிலைக்கு மக்கள் வந்தனர். அவர்கள் அரசை நம்பியல்ல. தமிழ்த் தேசியத் தலைவர் மீது கொண்ட நம்பிக்கையினையும் பற்றுறுதியினையும் கொண்டே இந்த நிலைக்கு அவர்கள் வந்தனர்.


இன்று தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ள நிலையில சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டும் அல்லாதுவிடில் போராட்டம் மூலம் தமது உரிமைகளை அவர்கள் தாமே அமைத்துக்கொள்ள வேண்டி வரும் எனவும் மேலும் தெரிவித்தார். (ந-4)

# மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்படின் ஒட்டுமொத்த இலங்கையுமே அதிரும்

## வவு. மாநாட்டில் ம.ம.மு.தலைவர் சந்திரசேகரன்

(வவுனியா)

தமிழீழத் தேசியத் தலைவரே எடுத்த முயற்சியைத் தொடருங்கள் உங்கள் பின்னால் இலங்கைத் தீவில் வாழும் அனைத்துத் தமிழர்களும் நிற்கின்றோம்.



இவ்வாறு வவுனியாவில் நடைபெற்ற தமிழத் தேசிய எழுச்சி மாநாட்டில உரை நிகழ்த்திய மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவர் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கையில் பலத்த கரகோசம் ஒலித்தது. தேசியத் தலைவர் பிரபாகரன் மூன்று நிமிடங்கள் கூட போராட்டத்தில் ஓய்வு எடுத்ததில்லை.

ஆனால் மூன்றரை வருடகாலமாக யுத்த நிறுத்த உடன்படிக்கையினால் பொறுமையாகக் காத்து வருகின்றார். அரசையோ சிங்களப் பேரினவாதிகளையோ நம்பி அவர் அமைதியைக் கடைப்பிடிக்கவில்லை. சர்வதேச சமூகத்திற்கு சிங்களப் பேரினவாதத்தைத் தோலுாித்துக் காட்டுவதற்காகவே அவர் அமைதிகாத்தார்.

ஆனால் சமாதானத்திற்கான வழிகள் அடைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சிங்கள அரசுக்குக் கொடுக்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பமும் முடியப்போகினறது.

சர்வதேச சமூகம் தற்போது ஒரு உண்மையினை உணர்நதுகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் போராடுவதைத தவிர வேறு வழியில்லை என்பதையும், அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இனனும் ஒரு யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அது இலங்கை முழுவதையும் அதிரச் செய்யும் எனவும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தார். (ந-4)

தினசரி தியானம்



விவேகச் சிந்தனைகள்

உயர்ந்த இலட்சியம் ஒன்றை உறுதியாகப் பற்றிக் கொண்டு உன் வாழ்வை அதற்காகவே விட்டுவிடு. இறப்பது உறுதி. ஒரு பெரிய நோக்கத்திற்காக உயிரைத் துறப்பது மிகமிக உயர்ந்தது. 'நான் உனது உடைமையே! நான் உனது உடைமையே!' என்று சொல்லிக் கொண்டே இரு. கடவுள் எங்கும் இருக்கிறார். அவரைத் தேடித்தேடி அலைய வேண்டாம். இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டு பார்க்க முயல்.

சுவாமி விவேகானந்தர்

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட சு.கவில் தகுதியானவர்கள் இல்லை

## சுட்டிக்காட்டுகிறார் ஐ.தே.க எம்.பி

(கொழும்பு)

இந்த நாடு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு சொந்தமான நாடல்ல. இந்த நாட்டில் வாழும் சகல மககளுக்கும் இந்த நாடு சொந்தம். அதனாலேயே நாமும் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன் ஜனாதிபதித் தேர்தலை ஜனநாயக ரீதியில் நடத்துமாறு வற்புறுத்தி வருகின்றோம்.

இவவாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட எம்.பி.யும் முன்னாள் தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சருமான லக்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். கம்பளை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற ஜாதிக சேவா சங்க கூட்டத்தில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தகுதியானவர்கள் எவரும் இல்லை. வெளிநாடுகளால் வழங்கப்பட்ட சுனாமி அபிவிருத்தி நிதியை தனியார் வங்கியில் முதலீடு செய்ய பிரதமருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது.

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியை ஜனாதிபதி நிதியில் வைப்பீடு செய்யலாம். அல்லது பிரதமர் நிதியில வைப்பீடு செய்யலாம். அல்லது மத்திய வங்கி அல்லது திறைசேரியில் இருக்க வேண்டும். அதனை தவிர்த்து சிலரது தனிப்பட்ட பெயர்களில் வைப்புச் செய்ய முடியாது.

அதேபோன்று ஜனாதிபதியும் ஜனாதிபதி நிதியில் இருந்து மில்லியன் கணக்கில் ஊழல் செய்துள்ளதாகத் தெரியவருகின்றது. இதனாலேயே இவர் ஜனாதிபதித் தேர் தலை உரிய காலத்தில் நடத்தத் தயங்குகின்றார் எனத் தெரிவித்தார். (ந-4)

# பொதுக் கூட்டங்களில் உரையாற்ற நெடுமாறனுக்கு நீதிமன்றம் அனுமதி

தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ. நெடுமாறன், பொதுச்செயலாளர் சு.ப.வீரபாண்டியன் ஆகியோர் பொதுக்கூட்டங்களில் உரையாற்ற தமிழ்நாடு உயர் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேசியதற்காக பழ.நெடுமாறன் மற்றும் சு.ப.வீரபாண்டியன் ஆகியோரை தமிழக அரசு பொடா சட்டத்தின் கீழ்கைது செய்தது.

தற்போது அவர்கள் பிணையில் உள்ளனர். ஆனால் இவர்களுக்கு பிணை வழங்கிய தமிழ் நாடு தலைமை நீதிமன்றம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளக கூடாது தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்து ஊடகங்களுக்கு பேட்டியளிக்கக் கூடாது என்று நிபந்தனை விதித்தது. இந்த நிபந்தனையை தளர்த்தக்கோரி பழ. நெடுமாறன் சு.ப.வீரபாண்டியன் ஆகியோர் தமிழ்நாடு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.அம்மனு தமிழ்நாடு தலைமை நீதிமன்ற நீதிபதிகள் என்.தினகர் மற்றும் சொக்கலிங்கம் ஆகியோர் முன் நேற்று விசாரணைக்கு வந்திருந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு பழ. நெடுமாறன் சு.ப.வீரபாண்டியன் ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை தளர்த்துவதாக அறிவித்தனர். தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் பேசக்கூடாது என்றும் தமிழர் தொடர்பான மாநாடு தொடர்பான விடயங்கள் மட்டும் பேசவேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்து ஊடகங்களுக்கு நேர்காணல் எதுவும் அளிக்கக்கூடாது என்ற நிபந்தனையில் மாற்றம் இல்லை என்றும் தங்களது தீர்ப்பில் தெரிவித்தனர். (ச)

## திருமறைக்கலாமன்றத்தின் கலைச்சங்கமம் நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தின் 40வது ஆண்டு நிறைவையொட்டி வழங்கும் சிறப்பு நிகழ்ச்சியின் கலைச்சங்கமம் நிகழ்வு நாளையும் நாளை மறுதினமும் பிற்பகல் 6.30மணிக்கு யாழ்.திருமறைக்கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாளை சிறப்புரைகள் மற்றும் இலங்கையில் 18 மாவட்டங்களில் இயங்கும் 20 திருமறைக்கலா மன்றங்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் கலைஞர் கௌரவிப்பும் யாழ்.திருமறைக்கலாமன்றத்தினின் தயாரிப்பில் 'கொல் ஈனுங் கொற்றம்' எனும் கூத்துருவ நாடகமும் 'அருளும் இருளும்' எனும் தலைப்பில் நாட்டியநாடகமும் இடம்பெறவுள்ளன.

அந்நிகழ்வை யொட்டி இன்று முதல் 3தினங்கள் காலை 10மணி முதல் பிற்பகல் 5மணிவரையும் திருமறைக்கலா மன்ற வரலாற்றைச் சித்திரிக்கும் கண்காட்சி றக்கா வீதியில் உள்ள கலாமுற்ற வளாகத்தில் இடம்பெற வுள்ளது. (ரூ-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீமத் பாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான தேவிமஹோற்சவம் இன்று காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.(ரூ-2)

## முதற்தடைவையாக கணித பாட முன்னோடிப் பரீட்சை நாளை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு இவ்வாண்டு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களுக்கு முதல்தடைவையாக நடத்தப்படவுள்ள கணிதபாட முன்னோடிப்பரீட்சை ஏற்கனவே திட்டமிட்டபடி நாளை சனிக்கிழமை காலை நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுரஎதிரிசிங்க அறிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் சகலபாடசாலைகளிலும் இப்பரீட்சை நடைபெறவுள்ளது. முன்னோடிப்பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள் பரீட்சைத்திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு அவை சகல வலயக்கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நாளை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 2மணிவரை இரண்டு தொகுதிகளாக பரீட்சை நடைபெறவுள்ளது. இப்பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு வேலைகள் அந்தந்த கோட்டக்கல்வி அலுவலகங்களில் நடைபெறும்.

மதிப்பீடு செய்யப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்பட்ட விடைத்தாள்கள் பின்னர் உரிய மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

சாதாரண தரப்பரீட்சையின் கணித பாடத்தில் மாணவர்கள் சித்தியடையும் வீதத்தை அதிகரிக்கும் நோக்கத்துட னும் கணிதபாட வினாத்தாள்களுக்கு மாணவர்கள் விடையளிக்கும் போது ஏற்படும் அச்சம் மற்றும் சந்தேகம் என்பவற்றை போக்கும் வகையிலும் கணிதபாடத்தில் முதல் தடைவையாக முன்னோடிப்பரீட்சை நடாத்தபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரூ9)

## தீவிபத்துக்குள்ளான பெண் வைத்தியசாலையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தபோது தவறுதலாக ஏற்பட்ட தீவிபத்தில் எரியுண்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடுப்பப்பெண்ணொருவர் சிகிச்சைபயனளிக்காமையினால் நேற்று முன்தினம் மரணமானார்.

இச் சம்பவத்தில் நெல்லியடியைச் சேர்ந்த செல்வராசா றோகினி (வயது 38) என்பவரே மரணமானவர் ஆவார். இவரது சடலம் விசாரனைகளின்பின் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-19)

## 20 பேரின் மரண..

ட்னை வழங்கப்பட்டுள்ளது.

சுங்க அதிகாரி சுஜித் பிரசன்ன பெரேராவின் கொலையில் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு அந்தத் தண்டனையினை நிறைவேற்றுவது சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகவும் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தண்டனையை செயற்படுத்துமாறு தெரிவித்து சட்டமா அதிபர் அந்தந்த குற்றவாளிகள் சம்பந்தமான ஆவணங்களை அனுப்பிவைப்பார் என்றும், பின் பிரதம நீதியரசரின் கருத்துக்களையும் பெற்று அனைத்துத் தகவல்களும் அடங்கிய அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கவுள்ளதாகவும் நீதியமைச்சர் டபிள்யு டி.ஜே.செனிவிரத்ன தெரிவித்தார். (ச)

## இந்திய ...

இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்கள் அவையில இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு இந்தியப்பாதுகாப்புத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இந்திய பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு மேற்கொள்வது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க இலங்கை அரசு யோசனை தெரிவித்தது.

இது குறித்து இந்தியா ஆராய்ந்து வருகிறது. ஆனால் இறுதி முடிபு எதுவும் இருக்கவில்லை. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாதுகாப்புத்துறை ஒத்துழைப்புக் குறித்து பேச்சுவார்த்தைகளுக்கான நிறுவனக்கட்டமைப்பு ஏதும் செயற்பாட்டில் இல்லை. எனினும் பாதுகாப்புத்துறை சார்ந்த ஒத்துழைப்புக் குறித்த கருத்துப்பரிமாற்றங்கள் கொழும்பில் உள்ள இந்தியத்தூதரகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரு நாடுகள் இடையில் இருதரப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இந்திய இராணுவப்பயிற்சி நிறுவனங்களில் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது என அவர் தெரிவித்தார்.

வெள்ளம், ஆழிப்பேரலை போன்ற இயற்கையின் சீற்றங்களின் போது நிவாரண உதவி, உயர் இராணுவ அதிகாரிகளின் சுற்றுப்பயணம், கடற்படைக்கப்பல்களின் பயணம், கடல் பகுதிகளில் கூட்டுக்கண்காணிப்பு ஆகியவை இலங்கையுடனான ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் அடங்கும் என பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.(ச-8)

## ஜனாதிபதி...

தின் கருத்தை அறிந்துகொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளதாக சந்திரிகா கருதுகின்றாராம். ஜனாதிபதி என்ற அடிப்படையில உயா நீதிமன்றத்தின் கருத்தை அறிந்து கொள்வதற்கான அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைவரின் சந்தேகம் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டால் குறித்த கால வரையறைக்குள் அதற்கான பதிலை அல்லது கருத்தை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்றும் அரசியல்யாப்பில் கூறப்பட்டுள்ளது. (ச)

## ஈ.பி.டி.பி....

சடலம் யாழ்.போதனாவைத்தியசாலையின் பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-19)

## போரை ஆரம்பிக்க....

பாளர் தமிழன், பூநகரி பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பெருந்தொகையான மக்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர். (ச-8)

## தலைவர்....

வைத்து கையளித்தனர். முன்னதாக நேற்றுக் காலை வவுனியா நகரில் அணி திரண்ட தமிழ்த்தேசியப் பேராளர்கள் கிளிநொச்சிக்கு அணியாக புறப்பட்டுச் சென்று பிரகடனத்தை கையளித்தனர்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சிமாநாட்டின் போது பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

கலையுலகில் 40 ஆண்டுகள் நிறைவில்
திருமறைக் கலாமன்றம்
வழங்கும் சிறப்பு நிகழ்ச்சி
கலைச் சங்கமம்

30,31, ஜூலை 2005 (சனி, ஞாயிறு) ஆகிய இரு நாட்களும் மாலை 6.30 மணிக்கு யாழ்.திருமறைக்கலாமன்ற அரங்கில்

சிறப்புரைகள்

நடனங்கள்

இவற்றுடன் 30-07-2005 சனிக்கிழமை

யாழ்ப்பாணம், இளவாலை, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, புத்தளம், ஹப்புத்தளை, கொழும்பு, பொலநறுவை, இரத்தினபுரி, காலி, கண்டி, அவிசாவளை, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், மாத்தறை, பாணந்துறை, மொனராகல ஆகிய பிரதேசங்களில் இயங்கும் இருபது திருமறைக்கலாமன்றங்களும் வழங்கும் கலை நிகழ்வுகள்

31-07-2005 ஞாயிறுக்கிழமை

கலைஞர் கௌரவிப்பு

கொல் ஈனுங் கொற்றம்–கூத்துருவ நாடகம்

(தயாரிப்பு–யாழ்.திருமறைக் கலாமன்றம்)

ஒரேவேசம் இலவசம்

கண்காட்சி

இன்று வெள்ளி முதல் ஞாயிறு வரை 29,30,31ஆகிய திகதிகளில் யாழ்.றக்கா வீதியிலுள்ள எமது கலாமுற்ற வளாகத்தில் திருமறைக் கலாமன்றத்தின் வரலாற்றுப் பதிவுகளை வெளிப்படுத்தும் கண்காட்சி

காலை 10 மணிமுதல் மாலை 5மணி வரை இடம்பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி 021 222 2393 (c-1492) –திருமறைக் கலாமன்றம்










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.